Registered as a News Paper in Sri Lanka

# கண்ணோட்டம்

கண்ணோட்டம் KANNOTTAM

வெளியீடு-41 | 26 செப்டெம்பர் 2007 | விலை: 10.00

மக்களின் விருப்பத்தை அறிந்து செயல்படுவது எனும் முறையைப் பின்பற்றுவதாகவும், எல்லா செயல்பாடுகளும் மக்கள் நலனுக்காகவே எனும் நோக்கத்துடனும் அமையும் போது மக்களை ஆள்வது எளிது.

சே குவேரா

# அரசியல் தீர்வு : வலுவடையும் கோரிக்கை

**இராணுவ ரீதியிலான வெற்றிகள் மூலம் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணமுடியாது. ஒற்றையாட்சியா?, சமஸ்டியா? என்ற இழுபறிகளுக்கு முடிவுகட்டி உருப்படியான அதிகாரப்பகிர்வை மேற்கொள்ளக் கூடிய தீர்வு திட்டம் முன்வைக்கப்பட வேண்டும்.**

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சியில் பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் கட்சிகளின் குழு ஒன்றையும், அந்த குழுவிற்கு ஆலோசனைகளை வழங்கும் நிபுணர்கள் குழு ஒன்றையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ ஏற்படுத்தினார். கட்சிகள் அனைத்தும் இந்த குழுவிற்கு தமது தீர்வுத் திட்ட யோசனைகளை சமர்ப்பித்து அவற்றின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கான அரசியல் அமைப்பு திருத்தத்தை மேற்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டது. தற்போது ஐக்கிய நாடுகள் சபையின் 62ஆவது கூட்டத் தொடரில் பங்கேற்பதற்காக நியூயோர்க் சென்றுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அங்கு இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜியை சந்தித்து (23.09.2007) பேசிய வேளையில் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த அரசியல் தீர்வு ஒன்று அவசியம் என்பதை இந்திய வெளியுறவுச் செயலர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்போது ஜனாதிபதி சர்வகட்சிக் குழுவால் முன்வைக்கப்படும் தீர்வு யோசனையை இந்த வருட இறுதிக்குள் அமுல்படுத்த எண்ணியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

சர்வகட்சிக் குழுவிற்கூடாக இனப்பிரச்சினை தீர்வுக்கான உருப்படியான ஒரு தீர்வு யோசனை மக்களுக்கு முன்வைக்கப்படும் என்ற நம்பிக்கை அரசியல் கட்சிகள் மத்தியிலும், மக்கள் மத்தியிலும் நாளுக்கு நாள் அருகிவகின்ற வேளையில் ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இராணுவ ரீதியிலான வெற்றிகள் மூலம் இனப்பிரச்சினக்கு நிரந்தர தீர்வு காணமுடிாயது அரசியல் தீர்வு முன்வைக்கப்பட வேண்டும் என்றும், ஒற்றையாட்சியா? சமஸ்டியா? என்ற இழுபறிகளுக்கு முடிவுகட்டி உருப்படியான அதிகாரப்பகிர்வை மேற்கொள்ளக் கூடிய தீர்வு யோசனை முன்வைக்கப்பட வேண்டும். புலிகளோடு மட்டும் பேசி தீர்வை எட்டமுடியாது. தீர்வு



முன்வைக்கப்பட்டு அனைத்து தமிழ் அரசியல் தலைமைகளும் உள்வாங்கப்பட வேண்டும் என்ற கருத்துக்கள் பல் வேறு தரப்புக்களாலும் வலியுறுத்தப்பட்டு வருவதுடன், வலுவடைந்தும் வருகின்றது.

கிழக்கு மாகாணத்தை வெற்றிகொண்டது போல வடக்கு மாகாணத்தையும் வெற்றி கொண்டுவிடலாம் என எண்ணாது தீர்வு முன்வைக்கப்பட வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார். உருப்படியான அதிகாரப்பரவலாக்கலை உள்ளடக்கிய தீர்வுத் திட்டத்தை முன்வைத்து வடக்கு மக்களை வெல்ல வேண்டும். எனவும் குறிப்பிட்டுள்ளார். அவர் நீண்ட காலமாக வலியுறுத்திவரும் இந்திய மாதிரியையே மீண்டும் அழுத்திக் கூறியுள்ளார். அது ஒரு முழுவதுமான

(தொடர்ச்சி 3ம் பக்கம்...)

## யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவினருடன் சந்திப்பு

### நிலவரம் தொடர்பாக விளக்கினார் தோழர் துரைரட்ணம்



ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈபிஆர்எல்எவ் பத்மநாபா) கட்சியின் சிரேஸ்ட தலைவர்களில் ஒருவரான தோழர் இரா. துரைரட்ணம், யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுவின் கிழக்கு மாகாண தலைவர் ப்ரஸன்டர் ஸ்காவிக் மற்றும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் ஆகியோருக்கிடையேயான சந்திப்பு ஒன்று 17.09.2007 முற்பகல் 11.30 மணியளவில் 29 ஏ, லேக் வீதி, மட்டக்களப்பில் அமைந்துள்ள ஈபிஆர்எல்எவ் (பத்மநாபா) கட்சியின் பிராந்திய அலுவலகத்தில் இடம்பெற்றது. இச்சந்திப்பின்போது கிழக்குமாகாணத்தின் சமகாலப் பிரச்சினைகள், பொது மக்கள் எதிர்கொள்ளும், நெருக்கடிகள் சந்பந்தமாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள், ஆள்கடத்தல் மற்றும் படுகொலைகள், அரசியல் கட்சிகள், அமைப்புக்கள் ஜனநாயகரீதியாக செயற்படுவதற்கு உள்ள தடைகள், நேரடியாகவும், மறைமுகமாகவும் பொதுமக்களுக்கு விடுக்கப்படும் மிரட்டல்கள், கட்டாய ஆட்சேர்ப்பு, பொதுமக்களிடமும், வர்த்தகர்களிடமும் மற்றும் நிறுவனங்களிலும் இடம்பெறும் கட்டாய நிதி திரட்டல், பலநோக்கு கூட்டுறவு சங்கங்களில் வறிய குடும்பங்களுக்கென அரசாங்கத்தால் வழங்கப்படும் சமூர்த்தி நிவாரணத் திட்டத்தின் கீழ் விநியோகிக்கப் படும் அரிசி கிலோ ஒன்றிற்கு 6 ரூபா தொடக்கம் 10 ரூபா வரை அறவிடப்படுவது போன்ற பல் வேறு பிரச்சினைகள் குறித்தும் இந்தச் சந்திப்பின் போது யுத்த நிறுத்த கண்காணிப்பு குழுவின் தலைவரிடம் தோழர் இரா. துரைரட்ணம் எடுத்துக் கூறியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்தநிறுத்த மீறல்களால் மக்கள் பாதிக்கப்படுவதை முடிவுக்கு கொண்டுவர யுத்தநிறுத்த கண்காணிப்பு குழு எடுக்கும் நடவடிக்கைகளுக்க ஈபிஆர்எல்எவ் முழு ஒத்துழைப்பை வழங்கும் எனவும் தோழர் துரைரட்ணம் குறிப்பிட்டுள்ளார்.

## ஐ.தே.கவின் நிலைப்பாடு மற்றொரு வரலாற்றுத் தவறு

சமஷ்டி கோட்பாடு உட்பட பல விடயங்களில் புதிய நிலைப்பாட்டை எடுத்திருக்கும் ஐக்கிய தேசிய கட்சியின் முடிவு அதிர்ச்சியளிப்பதாகவும் இது ஒரு வரலாற்றுத் தவறு என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார். இதை வன்மையாக ஆட்சேபித்து, சமஷ்டி கோட்பாட்டை கைவிட வேண்டாமென ஐக்கிய தேசிய கட்சி தலைமையை வேண்டுவதாக அவர் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

2003 ஜூன் 09ம், 10ம் திகதிகளில் டோக்கியோவில் நடைபெற்ற மாநாட்டில் 51 நாடுகளும், 22 சர்வதேச ஸ்தாபனங்களும் கலந்து கொண்டன. யசூசி அகாசி தலைமை தாங்கிய அம் மாநாட்டில் ஜப்பான் பிரதமர் கௌரவ யூனிச்சிரோ கொய்சுமீயும், கௌரவ ரணில் விக்கிரமசிங்காவும் உரையாற்றினர். இம் மாநாட்டில் ஒன்றுபட்ட இலங்கைக்குள் பேச்சுவார்த்தை மூலம் சமஷ்டி அடிப்படையில் தீர்வுகாண இரு சாராரும் ஒப்புக்கொண்டதன் மூலம் இலங்கை வாழ் சகல மக்களுக்கும் நன்மைதரும், மாநாடாக கருதப்பட்டது (தொடர்ச்சி 2ம் பக்கம்...)

## தமிழ் கட்சித் தலைவர்கள் ஜனாதிபதியுடன் சந்திப்பு

### கிழக்கு மக்களின் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் குறித்து எடுத்துக் கூறினர்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி அவர்களின் தலைமையில் தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் தலைவர் த.சித்தார்த்தன் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (பத்மநாபா) கட்சியின் பொதுச்செயலாளர் தி.ஸ்ரீதரன், ஆகிய மூவரும் 24 ஆகஸ்ட் 2007 அன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களை சந்தித்து மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும், அதிகார பகிர்ந்தளிப்பு தொடர்பாகவும் விரிவான கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர். குறிப்பாக அண்மையில் கிழக்கிற்கு விஜயம் செய்த போது மக்களாலும், அரச அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், சமூக, சமய தலைவர்கள் முன்வைத்த பிரச்சினைகள், தேவைகளை ஜனாதிபதிக்கு எடுத்துக்கூறினர்.

கிழக்கில் மீளக்குடியேற்றப் பட்டிருக்கும் மக்கள் ஒரு சுமூக வாழ்வை ஆரம்பிப்பதற்கான அடிப்படை வசதிகளையும், உள்ளீடுகளையும் உடனடியாக வழங்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர். மேற்படி கட்சிகளின் தலைவர்கள் தெரிவித்த விடயங்களை கேட்டறிந்த ஜனாதிபதி அவற்றிற்கான நடவடிக்கைகளை எடுப்பதாக தெரிவித்துள்ளார்.

சம்பூர் ,ஈச்சிலம்பற்று, மூதூர் கிழக்கு பகுதி மக்கள் மீண்டும் சொந்த இடங்களில் குடியேற்றப்பட வேண்டிய விடயம் சம்பந்தமாக பிரஸ்தாபித்த போது தற்போதைக்கு சம்பூரில் மீள்குடியேற்றம் சாத்தியமில்லை என்றும் ஈச்சிலம்பற்று, மூதூர் கிழக்கு மற்றும் திருகோணமலையின் பிற பகுதிகளில் மீள் குடியேற்ற நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

இடம்பெயர்ந்து மீள் குடியேற்றப்பட்ட பாதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கு விதை நெல், பசளை என்பன இலவசமாக உடனடியாக வழங்குவதற்கு (தொடர்ச்சி 2ம் பக்கம்)



வீ.ஆனந்தசங்கரி | த.சித்தார்த்தன் | தி.சிறிதரன்


கிழக்கு மாகாணத்திற்கு விஜயம — பக்கம்-02



அம்மன்று பதில்கள் — பக்கம்-03

உலகம் அறியாத சித்திரவதை — பக்கம்-05



இனப்பிரச்சினை தீர்வுக்கான யோசனைகள — பக்கம்-06



குடாநாட்டை உலுக்கும் படுகொலைகள — பக்கம்-07




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணோட்டம்
Kannottam



## ஒற்றையாட்சி காலாவதியான பதம்

இலங்கையில் இன சமூகங்களிடையே அதிகார பகிர்ந்தளிப்பிற்கான செயற்பாடுகள் துரிதமாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற கருத்துநிலை சர்வதேச உள்ளூர் அரங்கங்களில் வலுப்பெற்று வருகிறது. எக்காரணம் கொண்டும் இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்காக அமைக்கப்பட்ட அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழு ஸ்தம்பிதமடையக் கூடாது. தொடர்ந்து அது முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும். இலங்கையின் பல்லினபாங்கு என்ற யதார்த்தம் யாப்பு ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு எந்த இன, மத சமூகத்திற்கும் அநீதி இழைப்பதாக அல்லாத அரசியல் யாப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும். அது நடைமுறைக்கு வர வேண்டும் என்பதற்காக நாட்டின் எதிர்காலத்தை மக்களின் ஐக்கியத்தை, சமாதானத்தை கருத்திற்கெடுத்த சக்திகள் இடையறாது உழைத்துக்கொண்டிருக்கின்றன. உண்மையில் அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழுவிற்கு பங்களித்த இடதுசாரி கட்சிகள், தமிழ், முஸ்லீம், மலையக கட்சிகள் ஒரு கருத்தொருமைப்பாட்டை எய்தியுள்ளன என்றே கூற வேண்டும். ஐக்கிய இலங்கைக்குள் அதி கூடியபட்ச அதிகார பகிர்ந்தளிப்பு என்பதே இலங்கையின் சிறுபான்மை கட்சிகளின் பிரதான அபிலாசையாக அமைந்திருப்பது கவனத்திற்குரியது. ஒரு நாடு சமூக, பொருளாதார தளத்தில் சுபிட்சமடைய வேண்டுமாக இருந்தால் அங்கு மக்களின் வாழ்வு ஜனநாயகமயப்படுத்தப்பட வேண்டும் என்பது அதற்கு அடிப்படையாக அமைய வேண்டும்.

ஒற்றையாட்சியின் கீழ் இலங்கையில் அதிகாரப்பகிர்வு சாத்தியமில்லை, பொருத்தப்பாடுடையதல்ல என்பதை அண்மையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி அவர்களும், இலங்கை இனப்பிரச்சனை விவகாரத்தில் நீண்டகால பரிச்சயமுள்ளவரும், சென்னையிலிருந்து வெளிவரும் இந்து பத்திரிகையின் ஆசிரியருமான ராம் அவர்களும் மிகத் தெளிவாகத் தெரிவித்திருந்தனர். இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பிளாக் அவர்களும் இதனை வலியுறுத்தியுள்ளார்.

ஒற்றையாட்சியினுள் தீர்வு சாத்தியமானதல்ல என்பதை பல்வேறு ராஜதந்திர வட்டாரச் செய்திக் குறிப்புக்களும், பல கல்விமான்களின் ஊடகவியலாளர்களின், மனித உரிமைவாதிகளின் பத்தி எழுத்துக்கள் வலியுறுத்தி நிற்கின்றன.

குறிப்பாக அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் போராசிரியர் திஸ்ஸ விதாரண, இலங்கையின் அரசியல் யாப்பு விவகார அமைச்சர் டி.யூ குணசேகர ஆகியோரின் சோர்விலா உழைப்பு இங்கு பதிவு செய்யப்பட வேண்டும்.

பேசப்பட வேண்டிய இன்னுமொரு முக்கியமான விடயம் வடக்கு கிழக்கில் அதிகாரப் பகிர்ந்தளிப்பு அலகு பற்றியதாகும். அதிகாரப் பகிர்வு யாருக்கு, எந்தெந்த பிரதேசங்களில் வாழ்பவர்களுக்கு, எந்த சமூகங்களுக்கு என்பது தெளிவாக அடையாளப்படுத்தப்பட வேண்டும். வடக்கு கிழக்கு தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு என்னும் போது அவர்களுக்கான பிரதேசம் வாழிடம் எது என்பது தெளிவாக வரையறுக்கப்பட வேண்டும். இனப்பிரச்சனை விஸ்வரூபம் எடுப்பதற்கு தமிழர்கள் பாரம்பரியமாக வாழ்ந்த இடங்களில் பல தசாப்தங்களாக மேற்கொள்ளப்பட்டு வந்த திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் ஒரு முக்கிய காரணியாக அமைந்திருக்கின்றன. இதனால் தமிழர்கள் மத்தியில் எழுந்த நியாயமான அச்சம் தாம் ஒரு சமூகமாக ஒரு பிரதேசத்தில் பாதுகாப்பாக வாழ வேண்டும் என்ற எண்ணப்பாங்கு பல தசாப்தங்களினூடாக உருவாகியது. அதுவே பாரம்பரிய வாழிடம் எனப்படுகிறது. இலங்கையின் பிரதான அனைத்து சமூகங்களுக்கும் பாரம்பரிய வாழிடங்கள் இருக்கின்றன.

சிறுபான்மை சமூகங்களுக்கெதிரான மேலாதிக்க சிந்தனை இத்தகைய வாழிடங்கள் இலங்கையில் சிறுபான்மையினங்களுக்கு இருப்பதை ஏற்றுக் கொள்வதில்லை. முஸ்லீம் மக்களும் மலையக மக்களும் தாம் வாழும் பிரதேச ஸ்தல சூழ்நிலைகளுக்கேற்ப தம்மை ஒருங்கிணைத்த அதிகாரப் பகிர்வு அலகை கோரி நிற்கிறார்கள். தவிர மொழி கலாச்சாரம், மத நம்பிக்கைகள் மீதான பாரபட்சங்கள் களையப்பட வேண்டும் என்பதும் தம்மை நிர்வகிப்பது தமது அன்றாட அலுவல்களை தாம் அச்சமின்றி ஐக்கிய இலங்கைக்குள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். ஆனால் தமிழ் பாசிச சக்திகளும், பௌத்த சிங்கள மேலாண்மைவாத சக்திகளும் சமூகங்களின் தலைவிதி தமது கைகளிலேயே இருக்க வேண்டும், காழ்ப்பு வெறுப்புணர்வு தொடர வேண்டும் என்று இவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இவர்களின் இந்த எதிர்பார்ப்புகளுக்கு இடமளித்தால் இலங்கையில் சமூகங்களின் சகவாழ்வு எதிர்காலத்தின் மீதான நம்பிக்கைகள் என்பன தகர்த்தெறியப்பட்டு விடும். வன்மம், பகை, குரோதம், ன்பவற்றுக்கு பதிலாக சமாதான் சகவாழ்வு இலங்கை சமூகங்களில் பிரதியீடு செய்யப்பட வேண்டும்.

ஆயுதங்களுடன் அராஜகத்தில் ஈடுபடும் சக்திகள் இலங்கை நீண்ட காலத்திற்கு தமது சரணாலயம் என்று கருத தொடர்ந்தும் இடமளிக்க முடியாது.

இலங்கையில் இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதில் அண்டைநாடு இந்தியாவின் பங்களிப்பு முக்கியமானதாகும். இலங்கையில் அதிகாரப் பகிர்வையும், சமாதானத்தையும் காரிய சாத்தியமாக்க கடந்த இரண்டு தசாப்தங்களில் இந்தியா எடுத்துக் கொண்ட முயற்சிகளை நாம் மனங்கொள்ள வேண்டும். அந்த முயற்சிகள் தமிழ் பாசிச சக்திகளாலும் சிங்கள பேரினவாத சக்திகளாலும் சீர்குலைக்கப்பட்டன என்பதே உண்மையாகும். எனினும் ஒரு காலச் சுழற்சியினுடாக இந்தியாவே இலங்கையில் இனப்பிரச்சனை தீர்வில் பிரதான பங்களிப்பை வழங்க வேண்டும். என்பது மீண்டும் உறுதி செய்யப்பட்டுள்ளது. ஜனநாயக உணர்வு கொண்ட பெருவாரியான தமிழ் மக்கள் மத்தியிலும் அதி தீவிரவாத நிலைப்பாடுகளினுள் அகப்படாத பெருவாரியான சிங்கள மக்கள் மத்தியிலும் இந்த அபிப்பிராயம் நிலவுகிறது. இலங்கையின் துயரத்தை களைவதில் எம் நெருங்கிய அயலவர்கள் உதவ வேண்டும். இந்த சிக்கல்களிலிருந்து எம்மை விடுவிக்க வேண்டும். இனங்களின் ஐக்கியத்துடள் சமாதானமும், சுபிட்சமும் நிலவும் இலங்கையை கட்டியெழுப்ப வேண்டும் என்று இந்த நாட்டின் பெருவாரியான நாகரீகமான மக்கள் கருதுகிறார்கள்.

இனப்பிரச்சனை அதிகாரப் பகிர்வு கோட்பாடுகள் தொடர்பாக கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக நாம் விவாதித்தாயிற்று. இனி காரிய சாத்தியமாக்குவதைப் பற்றியே சிந்திக்க வேண்டும். இலங்கையின் இரு பிரதான கட்சிகளான ஸ்ரீ.ல.சு.க வும் ஐ.தே.க யும் தமது அன்றாட அரசியல் பேதங்களுக்கு அப்பால் ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பணிக்கு தம்மை தயார்படுத்த வேண்டும்.

## தமிழ் கட்சித் தலைவர்களின் கிழக்கு விஜயம்







வாகரை பாடசாலையில்



மட்டு. மாவட்ட செயலகத்தில்



வாகரை பிரதேச செயலகத்தில்

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் வீ.ஆனந்தசங்கரி, ஈ.பி.ஆர்.எல்.எப்-பத்மநாபா பொதுச் செயலாளர் தி.சிறீதரன் (சுகு), புளொட் தலைவர் த.சித்தார்த்தன் ஆகியோர் கிழக்கில் மீள்குடியேற்றம் உள்ளிட்ட மனிதாபிமான பிரச்சினைகளை கண்டும் கேட்டுமறிவதற்காக 21.08.2007 அன்று மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர். மாவட்டத்தில் கட்சிப்பணிகளை மேற்கொண்டுவரும் ஈ.பி.ஆர்.எல்.எப் -பத்மநாபா கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான தோழர் துரைரட்ணம், தோழர் பத்மநாதன், புளொட் அமைப்பின் மட்டு மாவட்ட பொறுப்பாளர் சூட்டி, அரசியல்துறை பொறுப்பாளர் தனபாலசிங்கம் ஆகியோரும் கட்சிகளின் தலைவர்களுடன் இணைந்து பொதுமக்களை சந்தித்தனர்.

மட்டு செயலகத்தில் மட்டக்களப்பு மேலதிக அரச அதிபர் மகேஸ்வரன் தலைமையில் மாவட்டத்தின் அரச திணைக்களங்களின் உயரதிகாரிகள், சிவில் சமூகத்தின் பிரதிநிதிகள், சர்வதேச உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் சர்வமத குழுவினர் மற்றம் அரச இராணுவ, விசேட அதிரடிப்படை, பொலிஸ் அதிகாரிகளை தனித்தனி குழுக்களாக சந்தித்து அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் அங்கு இடம்பெற்று வரும் அபிவிருத்திப் பணிகள், மீள் குடியேற்றம் ஆகிய விடயங்கள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடினர். அத்துடன் வாகரை பிரதேசத்திற்கு சென்று வாகரை பிரதேச செயலாளர் தலைமையில் சமூக தலைவர்கள், அரச அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், பொதுமக்கள் ஆகியோரை அங்கு சந்தித்து அங்குள்ள நிலைமைகளை விரிவாக கேட்டறிந்ததுடன் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டனர்.

இவ் விஜயத்தின் போது மக்களுடனும், நிறுவனங்கள், மற்றும் அதிகாரிகளுடனும் கலந்துரையாடப்பட்ட விடயங்களிலிருந்து உடனடி கவனத்திற்குரியவை என கட்சித் தலைவர்கள் தெரிவித்த விடயங்கள்

*1) மூதூர், சம்பூர், ஈச்சிலம்பற்று ஆகிய பகுதிகளை சேர்ந்த மக்கள் இன்னும் அகதி முகாம்களில் தங்கியுள்ளனர். அவர்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியேறி தமது வாழ்வை மீள ஆரம்பிக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைள் துரித கதியில் மேற்கொள்ளப்பட வேண்டும்*

*2) மீள குடியேறி சென்றவர்களுள் மிகப் பெரும்பான்மையானோர் யுத்தததினாலும், சுனாமியாலும் தமது வாழ்விடங்களை முற்றாகவோ அல்லது பகுதியாகவோ இழந்துள்ளனர். அவர்களுக்கு தற்காலிகமாக அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள தங்குமிடங்கள் கூட வாழ்வதற்கு உகந்ததாயில்லை. அவர்கள் ஒரு சராசரி வாழ்வை மேற்கொள்ளக்கூடிய அளவிலாவது உடனடியாக வீட்டுத் திட்டங்கள் அமைத்துக் கொடுக்கப்படல் வேண்டும்.*

*3) அம் மக்கள் வாழ்வதற்கான அடிப்படை ஆதாரங்கள் அனைத்தையும் இழந்தவர்களாக உள்ளனர். இவர்கள் தங்கள் வாழ்வை ஆரம்பிக்க துரித கதியில் வாழ்வாதார அடிப்படை தேவைகள் உள்ளீடுகள் வழங்கப்படல் வேண்டும்.*

*4) இப் பகுதி மக்கள் அனைவரும் விவசாயத்தில் அல்லது கடற் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களாகவே உள்ளனர். இவர்கள் தங்கள் தொழில்களை ஆரம்பிப்பதற்கும், புதிய தொழில் வாய்ப்புக்கள், போக்குவரத்து, மருத்துவ வசதிகள், மற்றும் கல்வி தேவைகள் தொடர்பாக நிலவும் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படல் வேண்டும்.*

இந் நிலைமைகள் தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்துக்கு எடுத்துச் சென்று ஓரளவேனும் அப்பகுதி மக்கள்படும் இன்னல்களை போக்க நடவடிக்கை எடுப்பதாக மூன்று கட்சிகளின் தலைவர்களும் தெரிவித்துள்ளனர்.

அரசும், அரச சார்பற்ற சர்வதேச, உள்ளூர் நிறுவனங்களும், பலதரப்பு உயிர் அச்சுறுத்தல் மத்தியிலும் பணியாற்றும் அரச உத்தியோகத்தர்கள், படைத்தரப்பினரும் இப் பகுதி மக்களின் கஷ்டங்களை குறைக்க நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதை அவதானிக்கக் கூடியதாக இருந்ததாகவும் கட்சித் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

### ஐ.தே.கவின் நிலைப்பாடு ...

*( 1ம் பக்கத் தொடர்ச்சி ..)*

தீர்வு ஒன்று ஏற்படும் நிலையை அடைந்துள்ள மிக முக்கியமான இவ் வேளையில் ஐக்கிய தேசிய கட்சி தனது கொள்கையை மாற்ற முயல்கிறது. தீர்வு அண்மித்துவிட்டதன் அறிகுறியாக ஆளும் கட்சியினரின் கருத்துக்களிலும் மாற்றம் தெரிகிறது. இக் கட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சி சரித்திரத்தில் இடம் பெறக்கூடிய இந்த தவறை செய்யக் கூடாது என வேண்டுகோள் விடுத்திருக்கும் அவர் 1957ம் ஆண்டு கண்டி யாத்திரை மேற்கொள்ளப்படாது இருந்திருந்தால் இனப்பிரச்சனைக்கான தீர்வு 50 ஆண்டுகளுக்கு முன்பே ஏற்பட்டிருக்கும் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### தமிழ் கட்சித் தலைவர்கள்....

( 1ம் பக்கத் தொடர்ச்சி )

வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதாகவும் கூறினார்

பாதிக்கப்பட்ட மீனவர் குடும்பங்களில் ஒரு பகுதியினருக்கு வலை, வள்ளம் போன்ற தொழில் சாதனங்கள் வழங்கப பட்டிருப்பதாகவும், ஏனையோருக்கும் வெகுவிரைவில் இவை வழங்கப்படும் எனவும் மேலும் நஷ்டஈடு, கல்வி, சுகாதாரம் போக்குவரத்து ஆகிய துறைகளில் ஏற்பட்ட சேதங்கள் பற்றாக்குறைகளை நிவர்த்திப்பதற்கான நடவடிக்கைகள் படிப்படியாக மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளார். அதேபோல் வீடுகளை இழந்த மக்களுக்கு, பகுதி பகுதியாக புதிய வீடுகள் கட்டியோ, அன்றி திருத்தியோ கொடுக்கப்படுமெனவும் குறிப்பிட்டார்

மூன்று கட்சிகளின் தலைவர்களும் மீன்பிடி, விவசாயம், சுகாதாரம், கல்வி, இழப்புக்களுக்கான நஷ்டஈடு, அரச உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவுகள், வீடமைப்பு ஆகிய துறைகளில் வேலைகளை துரிதப்படுத்துவதற்கு அதிகாரிகளின் குழுவொன்று அமைக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டனர்.

அதிகார பகிர்வு தொடர்பில் அனைத்துக் கட்சி குழுவின் செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படும் எனவும் ஜனாதிபதி இச்சந்திப்பின்போது தெரிவித்துள்ளார்.


## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது.
அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:-

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

E.P.I.C., Box No: 95
95144 Garges Les,
Gonnesse Cedex,
France.

P - Box No: 7183
Arumpakkam,
Chennai - 106,
India.

310, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
☎ 021 2222022

29 ஏ, வாவிக்கரை வீதி
மட்டக்களப்பு.
☎ 065 2225179

No: 159, கடல்முக வீதி
திருகோணமலை.
☎ 026 2227118


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் தீர்வு: வலுவடையும்.... 1ம் பக்கத் தொடர்ச்சி



சமஸ்டியோ அல்லது முழுமையான ஒற்றையாட்சியாகவோ இல்லாதிருப்பதால் சமஸ்டி ஒற்றையாட்சி என்ற சொற்களை கேட்டதுமே துணுக்குறுபவர்களும் இந்திய மாதிரியை நிராகரிக்க மாட்டார்கள் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் சமஸ்டியை ஆதரித்து பிரச்சாரத்தில் ஈடுபட்ட ரணில் விக்கிரமசிங்கா 49.7 வீத வாக்குகளை பெற்றதாகவும். இடதுசாரிகள் எப்போதுமே இதற்கு ஆதரவாகத்தான் இருந்து வருகின்றனர். எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் இலங்கைக்கு வருகை தந்திருந்த இந்து பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ராம் இனப்பிரச்சினை விடயத்தில் இலங்கையின் முக்கிய இரண்டு கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட தவறி விட்டதாகத் தெரிவித்துள்ளார். இலங்கையில் சமாதான பேச்சுவார்த்தைகள் பின்னடைவைச் சந்தித்தமைக்கு பேச்சுவார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட அளவிற்கு என்ன பேசப்பட வேண்டும் என்பது திட்டமிடப்படாமையே காரணம் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். புலிகள் அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் பின்னடைவை சந்தித்திருப்பதாகவும் அரசியல் ரீதியிலான தீர்வொன்றை நோக்கி செல்வதற்கு இதுவே சரியான தருணம் என்றும் குறிப்பிட்டுள்ள அவர் சமஸ்டியா? ஒற்றையாட்சியா? என்பது முக்கியமில்லை. அதிகாரங்களை பகிர்வதற்கும், தமிழர்கள் உட்பட அனைத்து சமூகங்களினதும் அபிலாசைகளை பூர்த்திசெய்யவதற்கும் ஏற்ற சமஸ்டியை மாதிரியாக கொண்ட ஒரு முறையை அரசாங்கம் கருத்திற்கெடுப்பது உகந்தது என்றும் கூறியுள்ளார்.

அண்மைக் காலங்களில் இலங்கை இராணுவம் முக்கிய பல வெற்றிகளை பெற்றுள்ளது. கிழக்கிலிருந்து புலிகளை விரட்டியமை, புலிகளின் ஆயுதக் கப்பல்களை தாக்கி அழித்தமை என்பன பாரிய வெற்றியாகும். ஆனால், இது யுத்தத்தின் மூலம் தீர்வைக்காணலாம் என அரசாங்கத்தை உந்துவதாக அமைந்து விடக்கூடாது யுத்தத்தின் மூலம் தீர்வு காண முடியாது. என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் றொபேட்பிளாக் தெரிவித்துள்ளார்.



Robert Blake

பயங்கரவாதத் தாக்குதல்களிலிருந்து நாட்டைப் பாதுகாக்கும் அதேவேளை தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்களின் அபிலாசைகளை பூர்த்திசெய்யக் கூடிய தீர்வை இலங்கை அரசு முன்வைக்க வேண்டும எனவும் தெரிவித்துள்ளார்.

ஒற்றையாட்சியா சமஸ்டியா என்ற சர்ச்சைக்குரிய பதப்பிரயோகங்களை தவிர்த்து அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவில் அங்கம் வகிக்கும் கட்சிகள் ஒரு தீர்வு திட்டத்தை வரைந்து முன்வைப்பார்கள் என்று நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மாகாணங்களுக்கு, உண்மையாகவே அதிகூடிய பட்சமாக அதிகாரப்பகிர்வை அளிக்கும் அரசியல் அமைப்பிற்கான அடிப்படைகளை உருவாக்குவதற்கு அரசியல் யாப்பு சமஸ்டி என்ற பதத்தால் வரையறுக்கப்படாவிட்டாலும் தற்போதைய அரசியல் யாப்பிலிருக்கும் ஒற்றை நிலை என்ற பதம் நீக்கப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு நிலவுவதாக ஈபிஆர்எல்எவ் (பத்மநாபா) அனைத்து கட்சி பிரதிநிதிகள் குழுவின் தலைவர் திஸ்ஸவிதாரணவிடம் சமர்ப்பித்துள்ள யோசனைகளில் குறிப்பிட்டு கூறியுள்ளது.

கிழக்கில் புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட பகுதிகளில் மீள்குடியேற்றமும், அபிவிருத்தியும் மேற்கொள்ளப்படுகின்ற அதேவேளை நாட்டில் அமைதியும், சமாதானமும் நிலைப்பதற்கு அரசாங்கமும், அனைத்துக் கட்சிகளும், இனப்பிரச்சினையின் முக்கியத்துவத்தை உணர்ந்து இனங்களுக்கிடையே நிலையான சமாதானத்தை கொண்டுவரக்கூடிய தீர்வு திட்டம் ஒன்றை சமர்ப்பிக்க முன்வர வேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகும். ●

---

*கா. சுந்தரமூர்த்தி, கரவெட்டி*

**கிழக்கை புலிகளிடமிருந்து இராணுவம் கைப்பற்றிய பின்னர் ராஜபக்ஷ அரசாங்கம் நடாத்திய "கிழக்கின் உதயம்" நிகழ்ச்சி பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

சிங்கள மக்கள் அரசாங்கத்திற்கு தொடர்ந்து ஆதரவளிப்பதற்கும், இந்தப் போரில் இழக்கப்பட்ட படையினரின் உயிர்கள் வீண் போகவில்லை எனக் காட்டுவதற்கும், புலிகளுடன் தொடர்ந்து போரிடும் அரச படையினரின் ஊக்கத்திற்கும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு இந்தக் கொண்டாட்டம் தேவையாக இருந்திருக்கலாம். ஆனால், தமிழர்கள் (புலிகளல்ல) ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு அரசியல் தீர்வை முன்வைத்து அதனை நடைமுறைப் படுத்தாத வரையில் எந்தக் கொண்டாட்டமும் நாட்டு மக்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியை தராது.

*சி. திலகவதி சென்னை*

**ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில், புலம்பெயர்ந்த தமிழர்களால் ஜூலை 1983ல் நடைபெற்ற இனக்கலவரம் நினைவுகூரப்பட்டதாமே?**

ஆண்டுதோறும் புலம்பெயர்ந்த தமிழர்களால் அக் கருப்பு ஜூலை நினைவுகூரப்பட்டு வந்தது. அப்பொழுதெல்லாம், வெளிநாடுகளில் வதியும் தமிழர்களின் எண்ணிக்கை இப்பொழுதைவிட மிகவும் குறைவானதாக இருந்தாலும் விகிதாசரமளவில் அந் நிகழ்வுகளில் கலந்துகொண்டோரின் எண்ணிக்கை மிக அதிகம். இப்போதைய நிகழ்வு, புலிவிசுவாசிகள் சிலரால் தங்கள் இருப்பை விளம்பரப் படுத்தவே நடாத்தப்படுவதால் அதில் கலந்துகொள்வோரின் எண்ணிக்கை புலம்பெயர்ந்து வதியும் தமிழர்களின் எண்ணிக்கையோடு ஒப்பிடுகையில் மிகவும் சொற்பமே!. இந் நிகழ்வுகள் புலி ஊடகங்களினால் ஊதிப் பெருப்பிக்கப்படும். ஆனால், வெளிநாட்டவர்களது ஊடகங்கள் இவற்றைக் கண்டு கொள்வதில்லை.

அத்துடன், 1983க்குப் பின்னர், பல்லாயிரக்கணக்கான உயிர்கள் பலியாகிவிட்டன. எத்தனையோ தமிழர்களும் முஸ்லிம்களும் மாற்று இயக்கங்களைச் சேர்ந்தவர்களும், தங்களுக்கு ஆதரவு தராதவர்களும் புலிகளால் பலியெடுக்கப்பட்டு விட்டனர். அப்படி புலிகளால் பலியெடுத்தவர்களின் எண்ணிக்கை ஜூலை 1983 இனக்கலவரத்தின்போது இறந்தோரின் எண்ணிக்கையை விட பல நூறு மடங்கு அதிகமாகும். இவ்வாறு புலிகள் பலியெடுத்த தினங்களும், கவனயீர்ப்புப் போராட்டத்திற்கான கருப்புத் தினங்களே! அந்த ஜூலை இனக்கலவரத்தின் கொடுமைகளுக்கு சிங்களத் தலைமை மன்னிப்புக் கோரிவிட்டது. புலிகள் படுகொலைகளை தொடர்ந்துகொண்டிருக்கின்றார்கள் என்பது இவர்களுக்கு புலனாவதில்லை.

*அ.அருள்விஜயன், கல்லாறு*



**கிழக்கை படைகள் கைப்பற்ற கருணா குழுவினர் தான் உதவியுள்ளதாக குற்றம் சுமத்தப்படுகிறதே?**

தமிழ் மக்களின் பூர்வீகப்பூமியின் இன்றியமையாத பகுதியான கிழக்கு இன்று தமிழர்களின் கைகளை விட்டுப் போவதற்கு முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவுடன் கைகோர்த்து இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை நிர்மூலமாக்கி தமிழர்களின் இன்றைய அழிவு நிலைக்கு வித்திட்டு வகை செய்த புலிகளும், அதற்கு ஆதரவாக அதன் பிரச்சாரத்திற்கு சோரம்போன தமிழர்களும் முதலில் தங்கள் குற்றத்தை பகிரங்கமாக ஒப்புக்கொள்ளட்டும்!

அத்துடன், தங்களின் ஒரு முக்கிய தளபதியாக களங்கள் பல கண்ட கிழக்கைச் சேர்ந்த கருணாவின் முக்கியத்துவத்தை உணராது, அவர் மீது கீழ்த்தரமான அவதூறுகளை சுமத்தி, மாத்தையாபோல் அவரையும் கொன்று தீர்த்துவிடலாம் எனத் தப்புக் கணக்குப் போட்ட புலிகளின் தவறுதான் இதற்கு அடிப்படை என்பதையும் ஒப்புக்கொள்கிறார்களா?

*து. சங்கரப்பிள்ளை, யாழ்ப்பாணம்*

**பிரபாகரனின் வழிநடாத்தலின் கீழ் தமிழர்களுக்கு விடுதலை கிட்டும் நாள் வெகு தொலைவில் இல்லையாமே?**

எந்த விடுதலையைக் குறிப்பிடுகிறார்கள் என்று குழப்பமாக இருக்கிறது! வேதாந்திகள் குறிப்பிடும் மண்ணுலகை நீத்து விண்ணுலகத்திற்குச் செல்லும் அந்த விடுதலையையா?

*ம. கமலநாதன், திருகோணமலை*

**யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை ஸ்ரீலங்கா அரசு கடைப்பிடிப்பது தான் இப்போதைய நிலைமைக்குத் தீர்வாக இருக்கும் என்று தமிழ்செல்வன் கூறியிருப்பது பற்றி ?**

யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழு வெளியிட்ட சமீபத்திய அறிக்கையில் தெரிவித்த கணக்கின்படி 2002 பெப்ரவரி 22ம் திகதி ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கும், புலிகளுக்குமிடையிலான யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது தொடக்கம் 2007 ஏப்ரல் 30ந் திகதி வரையிலான காலப்பகுதியில்

- புலிகளின் யுத்தநிறுத்த மீறல்கள் 3830
- படைகளின் யுத்த நிறுத்த மீறல்கள் 351

மூச்சு விடச் சந்தர்ப்பம் தாருங்கள் என தமிழ்செல்வன் கேட்கிறார்!

*க.பரமேஸ்வரமூர்த்தி, சுவிற்சர்லாந்து*

**த.வி.கூ, புளொட், ஈபிஆர்எல்எவ்(பத்மநாபர்) ஆகிய கட்சிகளின் தலைவர்களது சமீபத்திய கிழக்கு மாகாண விஜயத்தைத் தொடர்ந்து, மட்டக்களப்பில் சென்னன் படை என்ற பெயரில் அவர்களுக்கு ஆதரவு அளிப்போர்களை எச்சரித்து துண்டுப் பிரசுரம் வெளியிடப்பட்டிருக்கிறதாமே?**

"எல்லாளன் படை, சங்கிலியன் படை" என்று பல பெயர்களில் இப்படியான அனாமதேய துண்டுப் பிரசுரங்கள் யாழப்பாணத்திலும் கடந்த காலங்களில் வெளிவந்தன. இந்த விஷம் இப்பொழுது மட்டக்களப்பிலும் பரவத் தொடங்கியிருப்பது தமிழர்களின் துரதிருஷ்டமே!.



தங்களை யார் பிரநிதித்துவப்படுத்துவது என்பதை வன்முறையற்ற ஜனநாயக வழியில் தமிழர்கள் தேர்ந்தெடுக்க அனுமதிக்க சிலர் ஏன் அஞ்சுகிறார்கள்? இப்படியான செயற்பாடுகளுக்குப் பின்னணியில் இருப்பவர்கள் தமிழர் நலனில் கிஞ்சித்தும் அக்கறையற்று அவர்களை அடக்கியாள விரும்பும் வன்முறையாளர்கள்! இதற்கும் தங்களுக்கும் சம்பந்தம் இல்லை எனக் கருணாவின் கட்சியினர் தெரிவித்துள்ளனர். மக்களது வேண்டுதலும் அதுவே.

## அரிவண்டு பதில்கள்

*ச. செல்வராஜா, சாவகச்சேரி*

**வை.கோபாலசாமியின் ஈழத்தமிழர் ஆதரவு பற்றி?**

"ஸ்ரீலங்காவில் ஒரு பாரதூரமான இராணுவ நடவடிக்கை விரைவில் நடைபெறும். சிங்களவர்கள் சிறிது சிறிதாக இல்லாதொழிக்கப்பட்டு விடுவார்கள். முடிவில் புலிகள்தான் வெற்றி ஈட்டியவர்களாவர்.இந்த இராணுவ நடவடிக்கை எப்பொழுது தொடங்குமெனக் கூறமுடியாது. ஆனால், நடக்கும்." இது அவர் சமீபத்தில் பேசிய பொறுப்பற்ற பேச்சு!. மூச்சுத் திணறும் புலிகளுக்கு பிராணவாயு ஊட்ட முனையும் அவரின் புலிவிசுவாசப் பேச்சு, 'தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளுக்கான போராட்டமானது சிங்கள மக்களை இலங்கையிலிருந்து இல்லாதொழிப்பதற்கான போராட்டமே' என்ற சிங்கள பேரினவாதிகளின் பிரச்சாரங்களுக்கு வலு சேர்க்க இது போதுமே!

*க. கோபாலகிருஷ்ணன், இங்கிலாந்து*

**'சாவிலும் வாழ்வோம்' என்ற கோஷம் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியபடி, சில புலம் பெயர்ந்த புலி ஆதரவாளர்கள் வெளி நாடுகளில் ஆர்ப்பாட்டம் செய்தார்களாமே? அதென்ன 'சாவிலும் வாழ்வு'?**



இலங்கையில் நடைபெற்ற, நடைபெற்றுவரும் உயிரிழப்புகளைக் காரணம் காட்டி புகலிடத்தில் தாங்கள் அகதி அந்தஸ்துப் பெற்று வாழ்ந்து வருவதைக் குறிக்கிறார்களா, அல்லது மேன்மேலும் உயிர்கள் பலியாகினால் தான் இன்னமும் அகதி அந்தஸ்து பெறாதவர்கள் அதனைப் பெற்று வாழலாம் என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறார்களா, அல்லது பிரேதங்களில் ஏறி மிதித்துத்தான் தமிழ்ப் பிரதேசங்களின் தலைவர்கள் அதிகார வாழ்வு வாழ்கிறார்கள் என்று சொல்ல விழைகிறார்களா தெரியவில்லை!

இவர்களது இக் காட்டுமிராண்டி வார்த்தைகளுடன், *"வாழ்க்கையைக் கொண்டாடுவோம் மரணத்தையல்ல"* என்ற மறைந்த தோழர் கேதீஸ் லோகநாதனின் வார்த்தைகளை ஒப்பிட்டுப் பாருங்கள்!

*வை.பாலமுருகன், திருநெல்வேலி*

**தமிழர் போராட்டத்திற்கு ஆதரவாக வெளிநாடுகளில் வெளியிடப்படும் பல்வேறு தமிழ்ப் பத்திரிகைள் குறித்து என்ன கூறுகின்றீர்கள்?**

பத்திரிகைகள் வெளியிடப்படுவது உண்மைதான். ஆனால், வெளிநாடொன்றில் வதியும் என் நண்பர் ஒருவரின் கூற்றுப்படி, அவற்றில் பெரும்பான்மையானவை தமிழ் வியாபார ஸ்தாபனங்களின் விளம்பர வருவாயில் தனிநபர்களால் பிழைப்புக்காக நடத்தப்படுபவை, அல்லது புலிகளின் பினாமிகளால் நடத்தப்படுபவை. தமிழ், தேசியம், விடுதலை என்ற பெயரில் எதுவித பொறுப்புணர்வோ, பத்திரிகாதர்மமோ இன்றி புலி ஆதரவு என்ற கோதாவில் பொய்மைகளையும், விஷங்களையுமே கக்குகின்றன. அவர்களுக்கெல்லாம் தேவையானது, வருமானம், பத்திரிகையாளன் என்ற சமூக அந்தஸ்து. தமிழர்களின் நலன் என்பது ஒரு வெளி வேஷம்!

*வ.ஆனந்தமுருகன், யாழ்ப்பாணம்*

**பெருந்தொகை பணத்தை மகிந்த ராஜபக்சவிடம், புலிகள் லஞ்சமாகப் பெற்றுக் கொண்டதனால் தான் வடக்கு-கிழக்கு வாழ் தமிழ்மக்கள் சென்ற ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்க விடாது தடுக்கப்பட்டார்கள் என்ற சர்ச்சையில் புலிகள் ஒன்றும் கூறாது இருக்கின்றார்களே?**

தாங்கள் செய்த எந்தக் கொலையை, எந்தத் தவறைத்தான் புலிகள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்? அதன் உண்மைத்தன்மையை வெளிக்கொணரத்தான் எத்தனை தமிழ் ஊடகங்கள் முன்வந்திருக்கின்றன? 'Eelam Nation' என்ற புலிசார்பு பத்திரிகை, அதன் ஆசிரியத் தலையங்கம் ஒன்றில், "ஒரு முட்டாள் இப்படியான தொகையைக் கொடுக்க முன்வரும்போது, அந்த முட்டாளை விட ஒரு பெரிய முட்டாள்தான் அதை வேண்டாமென்று நிராகரிப்பான்" என்று புலிகளின் விபச்சாரத்துக்கு நியாயம் கற்பிக்கின்றது. அதே பத்திரிகை, மகிந்த ராஜபக்ச பல கடும் போக்குகளை முன்னெடுத்து தமிழ் இனத்தையே அழிப்பதாகச் சாடியிருக்கிறது.!

*அ.சண்முகநாதன், ஜேர்மனி*

**தமிழ் தேசிய கூட்டணி பாராளுமன்ற எம்.பிக்கள் சிலர் வெளிநாடுகளுக்குச் சென்று அந்நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களை எடுத்துக் கூறினார்களாமே?**



இரா. சம்பந்தன் தலைமையில் மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் ஆகியோரைக் கொண்ட குழு இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களை பிரஸ்தாபித்தபோது, அவர்களைச் சந்தித்த வெளி நாட்டுப் பிரமுகர்கள் "அது சரி!- இவையெல்லாம் இலங்கையிலுள்ள எங்களது தூதரகங்கள், அரசசார்பற்ற அமைப்புக்கள் மூலம் ஏற்கனவே எமக்குத் தெரியும். ஆனால், அவர்களால் தெரியப்படுத்தப்படும் எல்ரிரிஈ யின் மனித உரிமை மீறல்கள் பற்றி நீங்கள் எதுவும் கூறவில்லையே?" எனக் கேட்டுள்ளனர். அது பற்றி 'நாம் எல்ரிரீஈ யினருக்கு எடுத்துக் கூறுவோம்' என்று பதில் சொல்லி அசடு வழிந்தார்களாம் த.தே.கூ எம்பிக்கள்.

இவர்களாவது விடுதலைப் புலிகளிடம் கூறுவதாவது, புலிகள் அதைக் காதில் விழுத்துவதாவது!

இந்த வெளிநாட்டு விஜயத்தின்போது இவர்கள் சில தமிழர்களையும் சந்தித்தனர். அச் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்ட ஒரு நண்பர் தான் கிரகித்ததாக என்னிடம் கூறிய விடயங்கள்:-

1 *இவர்கள் தாங்களாகவே சுதந்திரமாகப் பேசவோ, செயற்படவோ முடியாது*

2 *தங்களில் யார் புலிகளுக்கு அதிக விசுவாசம் கொண்டவர்கள் என்று புலிகளுக்கு தெரிவித்துவிட வேண்டுமென்பதில் அவர்களுக்குள் ஒரு தீவிர போட்டி நிலவுகின்றது*

3 *புலிகளுக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டே பாராளுமன்றப் பதவிக்கு பங்கம் வராது பார்த்துக் கொள்ள வேண்டும், தமிழர் நலன் என்பது அவர்களுக்கு இரண்டாம் பட்சமே.*

4 *அரசாங்கத்தை எதிர்ப்பதாக வெளியில் காட்டிக்கொண்டு அதனிடமிருந்து தனிப்பட்ட சலுகைகளைப் பெற்றுக்கொண்டு வாழ்வது. அத்துடன், மகிந்தாவின் ஆட்சியைக் கலைத்து, ரணிலை அரியணையில் அமர்த்துவதற்கு ஆதரவளிப்பது என்ற மறைமுக நிகழ்ச்சி நிரலையும் வைத்திருக்கின்றார்கள*

இதிலிருந்து நீங்கள் என்ன புரிந்துகொண்டீர்கள் ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனப்பிரச்சினைக்கான தீர்வு இனிமேலும் தாமதிக்க முடியாது

# கைப்புண்ணுக்கு கண்ணாடி தேவையில்லை

60 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையில் இனப்பிரச்சனை தொடர்பாக அளவுக்கணக்கற்ற வாதப்பிரதிவாதங்கள் நிகழ்ந்திருக்கின்றன. அகிம்சை வழியிலும், ஆயுதமேந்திய வழியிலும் கிளர்ச்சிகள், போராட்டங்கள் நிகழ்ந்திருக்கின்றன. இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளும், சமாதான முயற்சிகள் என இந்த 60 ஆண்டுகளில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நிகழ்ந்துள்ளன.

சில தீர்வு யோசனைகளும் முன்வைக்கப்பட்டன. இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவான மாகாணசபை முறை 1990 களின் நடுப்பகுதியில் சந்திரிக்கா அவர்களின் ஆட்சிக் காலத்தில் முன்வைக்கப்பட்ட சமஷ்டி முறையிலான தீர்வு என்பன அண்மைக்காலத்தில் இதற்கு மிகச் சிறந்த உதாரணங்கள்

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் இணைந்த வடக்கு கிழக்கில் ஒரு மாகாண அரசு ஸ்தாபிக்கப்பட்டதும், திருகோணமலை தலைநகரமாக அமைந்ததும் அற்ப ஆயுளிலேயே தமிழ் பாசிச வாதிகளும், சிங்கள பேரினவாதிகளும் கரங்கோர்த்து அதனை சீர்குலைத்ததும் வரலாறு.

இதேபோன்று சந்திரிகா அவர்கள் தமது அரசின் அதிகாரப் பகிர்வு யோசனையை பாராளுமன்றத்தில் 2000 ம் ஆண்டில் முன்வைத்தபோது தமிழ் பாசிசத்தை ஆதரித்தவர்களும், ஐ.தே.க உட்பட்ட பேரினவாத கட்சிகளும் இணைந்து அதனை நிராகரித்ததையும் பாராளுமன்ற மேசையிலேயே சந்திரிகாவின் முன்மொழிவுகள் எரிக்கப்பட்டதும் இலகுவில் மறந்துவிடக் கூடிய விடயங்களலல்ல.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு இனப்பிரச்சனை தொடர்பான ஒருமித்த கருத்தை உருவாக்குவதற்கு நிபுணர்கள் குழுவொன்றையும், அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழுவொன்றையும் அமைத்தது. நிபுணர்குழுவின் ஊடாகவும், அனைத்துக்கட்சி பிரதிநிதிகள் குழுவின் தலைவர் திஸ்ஸ விதாரணவின் யோசனைகளாகவும் பருமட்டான ஆக்கபூர்வமான யோசனைகள் வெளிவந்தாலும் அவை ஹெல உருமய, ஜே.வி.பி ஆகிய கட்சிகளினால் வெளிப்படையாக நிராகரிக்கப்பட்டன.

அண்மையில் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் பெரும்பான்மையினர் ஒரு அறிக்கையை முன்வைத்தபோது அது பேரினவாத சக்திகளால் நிராகரிக்கப்பட்டது. ஐக்கிய தேசிய கட்சியும், தமிழ் தேசிய கூட்டணியும் அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழு நெருக்கடிக்கு உள்ளானதையிட்டு வெளிப்படையாகவே மகிழ்ச்சி தெரிவித்திருந்தது இலங்கையின் ஊடகங்களில் வெளிவந்திருந்தன.

எது எப்படியிருப்பினும் பேராசிரியர் திஸ்ஸ விதாரண, கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் டியூ குணசேகர போன்றவர்கள் சேதாரங்களை குறைப்பதற்கு மிகுந்த பிரயாசையை மேற்கொண்டனர். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழுவின் செயற்பாடுகள் தொடருமென தெரிவித்திருந்தார்.

அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழு செயற்பாடுகள் தொடர்பில் ஆக்கபூர்வமாக செயற்பட்ட இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜ கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ், ஈழ மக்கள் ஜனநாயக கட்சி, ஆகியவற்றின் பங்களிப்பை நாம் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும். இதேபோன்று பாராளுமன்றத்துக்கு வெளியில் இருக்கும் கட்சிகளான ஆனந்தசங்கரி அவர்களின் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி- பத்மநாபா ஆகிய கட்சிகளினதும் பி.பி. தேவராஜ், பேராசிரியர் சந்திரசேகரம் போன்ற கல்வியாளர்களின் பங்களிப்பையும் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

இனப் பிரச்சனை தீர்வு தொடர்பாக ஆக்கபூர்வமான பங்களிப்பே இன்று தேவைப்படுகிறது. குறிப்பாக மூன்று தசாப்தங்களுக்கு மேலாக மக்கள் படும் அவலங்களை கொஞ்சமேனும் மனதிலிருத்தி சிந்தித்தால் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான நாட்கள் நீண்டு செல்லாது.

தென்னிலங்கை அரசியலாயினும் சரி, வடக்கு கிழக்கு அரசியலாயினும் சரி இனப்பிரச்சனை நீண்ட கால்பந்தாட்டம் போல நிகழ்ந்து வருகின்றது. இதில் பந்தாக நைந்து, தொய்ந்து போனவர்கள் மக்களே. இலங்கையில் இனப் பிரச்சனை தீர்வு தொடர்பான நகர்வுகளில் ஒவ்வொரு தடவையும் மக்கள் தான் தோற்றார்கள்.

**ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப்பகிர்வை மேற்கொள்வது பிரிவினைக்கு வழிவகுத்துவிடும் என்ற தர்க்கப் பொருத்தமில்லாத மூடக் கதைகளையும் அதேபோல தூய தமிழ் பாசிச ராச்சியக் கனவுகளையும் நாம் இனிமேலும் சகித்துக் கொண்டிருக்கப் போகின்றோமா ?**

2000ம் வருடத்திற்கு மேற்பட்ட கலாச்சாரத்திற்கும், பாரம்பரியத்திற்கும், நாகரீகத்திற்கும் சொந்தக்காரர்கள் என எமது நாட்டு அரசியல் தலைவர்கள் எப்போதும் வாயோரியாக அரற்றுவார்கள். ஆனால், அப்படியான பாராம்பரியத்திற்கு சொந்தக்காரர்கள் ஏன் இன்றைய தலைமுறையில் மக்களை காட்டுமிராண்டி நிலைமையில் வாழ வைத்திருக்கிறார்கள் என்ற கேள்விக்கு அவர்களால் பதிலளிக்க முடியாது. அப்படியானால் வீண் பெருமை பேசும் இந்த பாரம்பரியத்திலும் ஏதாவது கோளாறு இருக்கிறதா என்ற கேள்வி நியாயமாகவே எழுகிறது.

மனித நேயமிக்க ஜனநாயக உணர்வு கொண்ட மனிதர்கள் இப்போதும் இருக்கத்தான் செய்கிறார்கள். அண்மையில் வண பிதா திஸ்ஸ பாலசூரியா அவர்கள் இலங்கையின் ஜனாதிபதி அவர்களுக்கும், எதிர்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கா அவர்களுக்கும் இனப்பிரச்சினை துரிதமாக தீர்க்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி உருக்கமான பகிரங்க கடிதமொன்றை எழுதியிருந்தார். அதேபோல் பேராசிரியர் திஸ்ஸ விதாரண அவர்கள் அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழுவினூடாக இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக நிகழ்த்திய தேடல் இங்கு குறித்து வைக்கப்பட வேண்டும்.

நாம் பிரச்சனைகளை தீர்த்துக் கொள்வது எவ்வாறு என்பதைக் கற்றுக் கொள்வதற்கு அதிக தூரம் செல்லத் தேவையில்லை.

காலனியாதிக்கத்திலிருந்து விடுபடுவதற்காக இந்தியா நடத்திய அகிம்சை வழி போராட்டமும், அந்த போராட்டத்தை முன்னெடுத்த தலைவர்கள் எவ்வாறு சமாதான வழிகளில் சுதந்திரத்திற்கான தேடல்களில் ஈடுபட்டார்கள் என்பதையும் இந்தியாவினுள்ளே பல மொழி, பல் கலாச்சாரம் கொண்ட மக்களிடையே அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதில் எத்தகைய நாகரீகமான முறைகள் கையாளப்பட்டன என்பதையும் கற்றுக்கொள்ளலாம்.

ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வை மேற்கொள்வது பிரிவினைக்கு வழிவகுத்துவிடும் என்ற தர்க்கப் பொருத்தமில்லாத மூடக் கதைகளையும் அதேபோல் தூய தமிழ் பாசிச ராச்சியக் கனவுகளையும் நாம் இனிமேலும் சகித்துக் கொண்டிருக்கப் போகின்றோமா?

நாம் இனிமேலும் 50 களின் நடுப்பகுதியில் என்ன நடந்தது? 40 களின் பிற்பகுதியில் என்ன நடந்தது. 60 களின் நடுப்பகுதியில் என்ன நடந்தது என்று பெருங்கதையாடல்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்க முடியாது. என்ன நடந்தது, என்ன நடைபெகின்றது என்பதை மக்கள் அனுபவ ரீதியாக கற்றிருக்கிறார்கள். கைப்புண்ணுக்கு கண்ணாடி தேவையில்லை.

இனப்பிரச்சனைக்கு இணைந்த வடக்கு கிழக்கில் திருகோணமலையை தலைநகராகக் கொண்ட தீர்வு என்பதே யதார்த்தமானது. முஸ்லீம் மக்களுக்கும் பிரத்தியேகமான அலகொன்று முஸ்லீம் மக்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட வேண்டும். இனப்பிரச்சினையின் அடிநாதமாக இருந்தது எல்லாவற்றையும் விட அவர்கள் பாராம்பரியமாக வாழும் பிரதேசங்களில் அவர்களின் எண்ணிக்கையை சிறுபான்மையாக்க எடுத்த முயற்சிகள் என்பதை மறுத்துவிட முடியாது.

இலங்கையில் சமூகங்களிடையே இதயபூர்வமான ஐக்கியத்தை கட்டியெழுப்புவதற்கு பிரதானமாக சிறுபான்மை சமூகங்களின் நியாயமாக அச்சங்கள் களையப்பட வேண்டும். சிங்கள மக்களை பொறுத்தமட்டில் இந்த நாட்டின் சனத்தொகையில் 70 வீதமானவர்களாக இருக்கின்றனர். அவர்களுக்கு இத்தகைய அச்சங்கள் எதுவும் எழுவதற்கு அடிப்படைகள் எதுவும் இல்லை.

உலகில் சமூகங்களிடையே அதிகார பகிர்வு தொடர்பான கருத்துக்கள் உருவானதும் அது அவை செயற்படுத்தப்படுவதும் பிரிவினை, மேலாதிக்க சிந்தனை, இரண்டாம் பட்சமாக நடத்துதல் என்பவற்றை இல்லாதொழிப்பதற்கும் சமூகங்கள் ஐக்கியமாக வாழ்வதற்காகவுமே. இதனை இலங்கையின் ஐக்கியத்தை, ஒருமைப்பாட்டை நேசிக்கும் சக்திகள் புரிந்து கொள்ள முயல வேண்டும்.

இனப்பிரச்சினை தீர்வுக்கான தேடல் கடந்த 60 வருடங்களில் அதன் சகல பரிமாணங்களையும் தொட்டிருக்கிறது. இனிமேலும் தாமதிப்பது நாம் இன்னுமொரு சோமாலியாவை, டாபரை கண்டுபிடிப்பதாகவே அமையும்.

# "இறுதி யுத்தத்திற்கு" நிதியுதவி செய்தல்

### நிதி திரட்டுதலும் பலாத்கார பணப்பறிப்பும்

**உலக தமிழர் இயக்கத்தின் பதில்கள்**
( சென்ற இதழ் தொடர்ச்சி )

புலிகள் இயக்கத்தோடு உலகத் தமிழர் இயக்கத்திற்கு இருக்கின்ற உறவு தொடர்பாக கேட்டபொழுது, அங்கு நடக்கின்ற எமது போராட்டம் தொடர்பாக நாம் அனுதாபம் கொண்டிருக்கின்றோம். அத்துடன் புலிகள் இயக்கமானது எங்கள் உரிமைகளுக்காக அங்கு முன்னணியில் இருந்து போராடிக் கொண்டிருக்கிறது. அவர்களுக்கு உதவுவதற்காக நாங்கள் எப்பொழுதும் சில பிரச்சாரங்களை மேற்கொள்கின்றோம். என சிற்றம்பலம் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் தெரிவித்தார். ஆனாலும் அவ்வியக்கத்தின் இணையத்தளத்தில், புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் கருத்து, மேற்கோள்கள் மிக முக்கியத்துவப்படுத்தப்பட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் உலகத் தமிழர் இயக்கமானது, புலிகள் இயக்கத்திற்கோ அல்லது வேறு எந்தவொரு அமைப்புக்கோ நேரடியாக நிதி சேகரிப்பதை சிற்றம்பலம் மறுத்தார். அவர் மேலும், மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பிடம் தெரிவிக்கின்றபொழுது:

*நாங்கள் நிதி சேகரிப்பது கிடையாது. ஆனால் இலங்கையில் சுனாமியாலும், யுத்தத்தினாலும் பாதிக்கப்பட்டு புனர்வாழ்வு அளிக்கப்பட வேண்டிய எமது மக்களுக்கு உதவி செய்யும்படி இங்குள்ள மக்களுக்கு ஆலோசனை சொல்லுவதுடன், பிரச்சாரமும் செய்வோம். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் (TRO) அல்லது தமிழர்களுக்கான சமூக பொருளாதார அபிவிருத்திச் சங்கம் (SEDAT) ஆகியவற்றிடம் உங்கள் பங்களிப்புக்களை வழங்குங்கள் என்று, நாங்கள் அவர்களிடம் சொல்லுவோம். சிலர் இங்குள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கிளையிடம் வழங்குவார்கள். அல்லது வங்கிக்கூடாக மற்றொரு வங்கிக்கு மாற்றி விடுவார்கள். மக்கள் தாங்கள் விரும்பியபடி தனிப்பட்ட ரீதியிலேயே இதைச் செய்கிறார்கள்.*

உலகத் தமிழர் இயக்கத்தின் பிரதிநிதிகள் நேரடியாக பணம் கேட்கிறார்கள் எனச் சொல்லப்படுகின்றதே, என அவரிடம் கேட்டபொழுது "அது சரியல்ல என்றே நான நினைக்கிறேன். ஏனெனில் நாங்கள் அந்த மக்களுக்கு உதவி செய்யுங்கள் என்று இவர்களை கேட்கின்றோம். அவர்கள் தாங்களாகவேதான் அவற்றை (பணத்தை) அனுப்புகின்றனர்." என சிற்றம்பலம் பதிலளித்தார். புலிகள் இயக்கத்திற்காக உலகத் தமிழர் இயக்கம் பணம் சேகரிக்கின்றது என்பதையும் அவர் மறுத்தார். "நாங்கள் புலிகள் இயக்கத்திடம் கொடுங்கள் என்று சொல்லுவதில்லை. ஏனெனில் இங்கு நிதி கேட்பதற்கு புலிகள் இயக்கம் என்று யாருமே இல்லை." அவரின் இந்த வாக்குமூலமானது மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு சேகரித்த ஏனைய பல வாக்குமூலங்களோடு முரண்படுகின்றது.

**புலம்பெயர்ந்த தமிழர்களிடம் புலிகள் இயக்கத்தின் அச்சுறுத்தல்களும் பலாத்கார பணப்பறிப்பும் தொடர்பாக 2005 அக்டோபர் தொடக்கம் 2006 பெப்ரவரி வரை கனடா, இங்கிலாந்து, ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் சிறார்கள் உரிமைகள் பிரிவின் நியாயப் பிரச்சாரப் பணிப்பாளர் ஜோ. பேக்கர் அவர்களால் எழுதப்பட்டு மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் பல்வேறு பிரிவுகளின் பணிப்பாளர்களாலும் பரிசீலிக் கப்பட்டு தயாரிக்கப்பட்ட அறிக்கை மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பினால் வெளியிடப்பட்டது. அவ்வறிக்கை தொடராகப் பிரசுரிக்கப்படுகின்றது.**

### VI. இலங்கைக்குப் போகும் புலம்பெயர் தமிழர்களிடம் பலாத்கார பணப்பறிப்பு

2002ம் ஆண்டு பெப்ரவரியில், இலங்கை அரசாங்கத்திற்கும் புலிகள் இயக்கத்திற்கும் இடையேயான யுத்த நிறுத்த ஒப்பந்தம் அமுலுக்கு வந்த பின்னர், ஏற்பட்ட ஒப்பீட்டளவிலான சமாதான சூழ்நிலையை வாய்ப்பாக பயன்படுத்தி, இலங்கையில் பெரும்பாலும் புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசமான வடக்கு கிழக்கில் இன்னும் தங்கியிருக்கும் தமது உறவினர்கள் மற்றும் நண்பர்களைப் பார்வையிடுவதற்காக வெளிநாடுகளில் இருந்து செல்லும் தமிழர்களின் எண்ணிக்கையானது படிப்படியாக அதிகரித்தது. அவ்வாறு சென்றவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க அது புலிகள் இயக்கத்தின் நிதி வருமானத்திற்கான ஊற்றாக அமைந்தது. புலிகள் இயக்கமானது, வெளிநாடுகளில் இருந்து அங்கு செல்லும் தமிழர்களை மிகத் திட்டமிட்ட வகையில் இனங்கண்டு தங்களுக்கான நிதி பங்களிப்பை செய்யும்படி அழுத்தமிட்டது.

இலங்கையில் வட பிரதேசத்திற்கு பயணிப்பவர்களுக்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. ஒன்றில் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு விமான மூலம் செல்லுதல். அல்லது இலங்கையின் வடக்கு தொங்கலில் உள்ள யாழ்ப்பாணத்தில் இருந்து தெற்கே கண்டி வரையும் நீண்டுள்ள ஏ-9 பெருந்தெருவின் ஊடாக வடக்கிற்கு பயணித்தல். வவுனியாவில் இருந்து வடக்கு நோக்கி பயணிப்பவர்கள் அரசாங்கத்தினதும் புலிகள் இயக்கத்தினதும் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை பிரிக்கின்ற, ஓமந்தை மற்றும் முகமாலை சோதனைச் சாவடிகளுக்கு ஊடாகச் செல்ல வேண்டியுள்ளது. அரசாங்க கட்டுப்பாட்டுப் பிரதேசத்தைவிட்டு - சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் கண்காணிக்கப்படுகின்ற, சில கிலோ மீட்டர்கள் நீளமான, எவரது கட்டுப்பாட்டிலும் இல்லாத நிலப் பகுதியை (No man land) கடப்பதற்கு முன்னர் இப் பயணிகள், தமது வாகனங்களை விட்டு வெளியே இறங்கி அரசாங்க சோதனைச் சாவடியில் தமது ஆவணங்களை காண்பிக்க வேண்டும். மறுபுறத்தில் புலிகள் இயக்கத்தின் சோதனைச் சாவடியிலும் அப் பயணிகள் மீண்டும் நிறுத்தப்பட்டு, புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் செல்லு முன்னர் தமது ஆவணங்களை காண்பிக்க வேண்டும். அங்கு பயணிகள், இலங்கை பிரஜைகள், வெளிநாட்டு கடவுச்சீட்டு வைத்திருப்பவர்கள் என்னும் அடிப்படையில் வெவ்வேறான வரிசைகளில் நிற்கும்படி அடையாளம் இடப்பட்ட இடங்களுக்கு போகும்படி பணிக்கப்படுகின்றனர்.

வெளிநாடுகளில் இருந்து அண்மையில் இலங்கையின் வடபகுதிக்கு சென்ற தமிழர்களிடம் அச் சோதனைச் சாவடியில் வைத்து 1,000 ரூபாய்கள் (பருமட்டாக 10 அமெரி. டொலர் ) பெறப்பட்டு, அனுமதி அட்டை (Pass) ஒன்று வழங்கப்படுகின்றது. அப் பயணிகள் தாங்கள் போய்ச் சேர வேண்டிய இடத்தை சென்றடைந்து மூன்று தினங்களுக்குள் ஒன்றில் யாழ்ப்

*(மிகுதி அடுத்த இதழில் ..)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம் அறியாத புலிகளின் குரூர சித்திரவதை

**ஈபிஆர்எல்எவ் உடன் தொடர்புடையவர் என புலிகளால் கைது செய்யப்பட்டு சித்திரவதைகளை அனுபவித்த ஒருவரின் கண்ணீர் கதை புலிகளின் வதைமுகாமிலிருந்து தப்பிய அவர் எழுதி வெளியிட்ட "ஆயுதங்கள் மேல் காதல்கொண்ட மனநோயாளிகள்" என்ற சிறு பிரசுரத்தின் ஒருபகுதி**

( சென்ற இதழ் தொடர்ச்சி )

2

இங்கு விசாரணை என்ற பெயரில் ஏதேதோ நடக்கும். ஆரம்ப விசாரணை என்பார்கள். பூர்வாங்க விசாரணை என்பார்கள். ஒரு கைதி பற்றி தனிப்பட்ட முழு விபரங்களும் எடுக்கப்படும். அத்துடன் அவர் பெற்றோர், சகோதரர்கள் அனைவரினதும் விபரங்களும் பெறப்படும். குறிப்பிட்ட கைதியின் மீது குற்றப்பத்திரம் ஒன்று வைத்திருப்பார்கள். ஆனால் அதை சொல்ல மாட்டார்கள். நீ என்ன காரணத்துக்காக பிடிக்கப்பட்டாய் என கைதிகளையே கேட்பார்கள். சொல்லத் தெரியாத அப்பாவி கைதிகள் முழிப்பார்கள். அடி விழும். விசாரணை செய்யும் போது கைதியின் கண்ணை கட்டி விடுவார்கள். எப்போ அடி விழும் என கைதிக்கு தெரியாது. அடிவிழும் போது கைதி துடிப்பார்.

சில கைதிகளை விசாரிக்கும் போது அவர்கள் மீது உள்ள குற்றச்சாட்டுக்களை நானும் அறியக் கூடியதாக இருந்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த முன்னாள் யாழ் மாவட்டசபை உறுப்பினரும், 1989ம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் யாழ் மாவட்டத்தில் போட்டியிட்டவருமான நடேசு என்பவர் எம்முடன் கைதியாக இருந்தார். அவர் மீது புலிகள் கூறும் குற்றம் என்னவெனில் வட்டுக் கோட்டைப் பகுதியில் தலைமறைவாக இயங்கி பல பொது மக்களை கொலை செய்து வந்த தும்பன் என்ற புலியை இந்திய அமைதி படையினர் சுட்டுக் கொன்றனர். இதற்காக விருந்து வைத்துக் கொண்டாடினார் என்பதாகும். ஆனால் தான் அப்படி விருந்தொன்றும் வைக்கவில்லை என அவர் மறுத்தார்.

இன்னுமொரு கைதி ஸ்கந்தவரோதயா கல்லூரியின் உயர்தர மாணவன். இவரின் வீட்டில் துப்பாக்கியுடன் எடுத்த புகைப்படம் ஒன்று புலிகளால் கண்டெடுக்கப்பட்டது. அந்த படத்தில் உள்ள துப்பாக்கி எங்கே? அதை மறைத்து விட்டார் என்பதே குற்றச்சாட்டு. ஆனால் சம்பவம் பற்றி குறிப்பிட்ட கைதி அழுதபடி எனக்குச் சொன்னார். துப்பாக்கியுடன் புகைப்படம் எடுக்க வேண்டுமென்ற ஆசையினால் ஒரு இயக்க நண்பரின் துப்பாக்கியை வாங்கி வைத்துக் கொண்டு புகைப்படம் எடுத்தாராம். அந்த புகைப்படம் புலிகளிடம் சிக்கியதால்தான் இப்போது சிறையிலிருக்கிறாராம்.

ஆனைக்கோட்டைச் சந்தியில் ஒரு அமைதியான குடும்பஸ்தருக்கு மூன்று வீடுகள் சொந்தமாக இருந்தது. அதில் இரு வீடுகளை அமைதிப் படையினர் பொறுப்பேற்று முகாமிட்டிருந்தனர். அவ்வீடுகளுக்குரிய மாதாந்த வாடகைப் பணத்தை இவர் பெற்று வந்துள்ளார். அந்த முகாமின் ஒரு பகுதியில் EPRLF முகாமும் செயல்பட்டு வந்திருக்கிறது. இந்திய அமைதிப்படை வெளியேறியபோது முகாம் கைவிடப்பட்டது. அங்கு இருந்த காப்பரண்களுக்குப் பாவிக்கப்பட்ட கல், மண், இரும்புகள் போன்றவற்றை உழவு இயந்திரம் மூலம் வீட்டு உரிமையாளர் அகற்றியுள்ளார். சில நாட்களின் பின் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். EPRLF முகாமிலிருந்து ஆயுதங்கள் கடத்தி புதைத்து வைபபதற்கு உதவியதாக குற்றஞ்சாட்டப்பட்டார்.

பண்டத்தரிப்பு சந்தியில் சிகையலங்காரம் செய்யும் கடை வைத்திருந்த ஏழைத் தொழிலாளி ஒருவரும் எம்முடன் சிறையிலிருந்தார். இவரின் கடை பண்டத்தரிப்பு முகாமுக்கு மிக அருகில் இருந்தது. இவரிடம் சிகை அலங்காரம் செய்வதற்கு EPRLF உறுப்பினர்கள் அங்கு செல்வது வழக்கம். அந்த வகையில் அவர்களுடன் இவர் பழகி வந்திருக்கிறார். முகாம் கைவிடப்பட்டதும் புலிகளால் கைது செய்யப்பட்டு EPRLF க்கு துப்பு கொடுத்து வந்ததாகவும் அவர்களுக்கு தனது வீட்டிலிருந்து உணவு கொண்டு சென்று கொடுத்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டு சிறை வைக்கப்பட்டிருந்தார்.

EPRLF இயக்கம் காரைநகர் கடற்படை முகாம் மீது தாக்குதல் நடத்தியபோது குருநகர் தொடர்மாடியில் இலங்கை இராணுவம் முகாமிட்டிருந்தது. இராணுவத்தை முகாமுக்குள் முடக்கும் நோக்கத்துடன் முகாமைச் சுற்றி கண்ணிவெடிகளை EPRLF வெடிக்க வைத்துக் கொண்டிருந்த சமயம் பேர்ணாட் என்றும் பொதுமகன் ஒருவர் கண்ணிவெடியில் அகப்பட்டு காலில் காயப்பட்டார். இச் சம்பவம் நடைபெற்று சில வருடங்களில் புலிகளின் காட்டுத் தர்பாரின் போது போணாட் என்பவர் கைது செய்யப்பட்டார். விசாரணையின் போது இராணுவத்தினரின் செல் தாக்குதலினால் காயம் பட்டதாகப் பொய் கூறிவிட்டார். உண்மை சம்பவத்தை சொன்னால் தன்னையும் ஒரு EPRLF உறுப்பினர் என தீர்மானித்து சுட்டுக்கொன்று விடுவார்களோ என்ற பயத்தில் பொய் கூறிவிட்டார். ஆனால் உண்மையில் விபத்து நடந்தது எப்படி என்பதை அறிந்திருந்த புலிகள் அவரை சுட்டுக்கொன்றுவிட்டார்கள். இது பற்றி அவரின் மனைவிக்கு சமீபத்தில் புலிகளால் அறிவிக்கப்பட்டுள்ளது. இயக்கங்களுடன் எவ்வித தொடர்புமில்லாத அப்பாவி பயத்தின் காரணமாக சிறியதோர் பொய் சொன்ன ஒரே காரணத்துக்காக புலிகளினால் ஈவிரக்கமின்றி கொலை செய்யப்பட்டுவிட்டார்.

குருநகர் கடற் தொழிலாளருக்கு தொழிற்சங்கம் ஒன்று அமைப்பது சம்பந்தமாக EPRLF இயக்கத்துடன் தொழிற்சங்க தொடர்புகளை மேற்கொண்டு வந்த கடற்தொழிலாளி ஒருவரும் சிறையில் வாடுகிறார். இவர் கொஞ்சம் வசதி படைத்தவர். இவரின் சொத்துக்கள் அனைத்தும் புலிகளினால் பறிமுதல் செய்யப்பட்டு விட்டது. EPRLF இயக்கத்துடன் தொடர்பு வைத்திருந்ததாகவும், தொழிற்சங்கம் அமைக்க முயன்றதாகவும் மேற்படி நபர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மக்கள் வங்கியின் பிரதேச முகாமையாளர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இவர் இந்திய உளவுப் பிரிவான றோ வைச் சேர்ந்தவர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாணத்தில் புலிகளினால் சீர்குலைக்கப்பட்ட வங்கிச் சேவைகளை சீராக செயல்பட வைப்பதற்காக இந்திய அமைதிப்படை உயர் அதிகாரிகளை அடிக்கடி சந்தித்து வந்ததே இவர் செய்த குற்றமாகும்.

வேலணை சந்தியில் சிறு தையற்கடை வைத்திருந்த இஸ்லாமிய சகோதரர் ஒருவரும் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். இவரின் கடை அமைதிப்படை EPRLF முகாம்கள் அமைந்திருந்த பகுதியிலேயே இருந்தது. அவர்களின் தையல் வேலைகளை இவர் செய்து வந்திருக்கிறார். EPRLF ற்கு சீருடை தைத்துக் கொடுத்ததாகவும் தகவல்கள் கொடுப்பதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தார்.

(அடுத்த இதழில் தொடரும்)



# காந்தி வாழ்க்கைச் சித்திரம்

## பி.ஆர். நந்தாவின் நூலில் இருந்து

**"காந்தி வாழ்க்கைச் சித்திரம்" நூல் பி.ஆர். நந்தா எழுதி என்.ஜே. ராஜாமணியினால் தமிழாக்கம் செய்யப்பட்டு, இந்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தால் வெளியிடபபட்டுள்ளது. மகாத்மா காந்தியின் வாழ்க்கை வரலாற்றை படம்பிடித்துக்காட்டும் இந் நூல், கண்ணோட்டத்தில் தொடராக பிரசுரிக்கப்பட்டு வருகின்றது. அதன் ஒருபகுதி இவ்விதழில் பிரசுரமாகிறது.**

இரண்டு ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த பின் காந்தி, பெப்ரவரி 1924ல் குடல் வால் அழற்சி அறுவைச் சிகிச்சைக்குப் பின் பிடுதலை செய்யப்பட்டார். அவரிடம் விசுவாசமுள்ள, மாற்றம் விரும்பாதவர்கள் எதிர்பார்த்தபடி, அவர்களை முழுமூச்சுடன் அவர் ஆதரிக்கவில்லை. அதற்கு மாறாக, கட்சியில் பிளவை தவிர்க்க தன்னால் இயன்றதைச் செய்தார். "புரட்சிக்காரர்" களான ஸ்வராஜ் காரர்களுக்கு பலவித சலுகைகள் காட்டி, அரசியல் மேடையில் அவர்கள் ஆதிக்கம் செலுத்த அனுமதித்தார். அவர் தலைவரல்ல, தலைவர்களில் ஒருவர்தான் என அவரையும், அவரது ஆதரவாளர்களையும் எண்ணும்படி செய்ய அவர்கள் தங்களால் இயன்றவரை முயற்சி செய்தபோதும், தாஸ் மற்றும் நேருவின் பின்னால் தான் காந்தி இப்போது ஒட்டிக்கொண்டுள்ளார். என்று வைஸ்ராய் பிரிட்டனுக்கு கடிதம் எழுதினார்.

சட்டசபை நுழைவு குறித்து காங்கிரஸில் ஏற்பட்ட பிளவு காந்திக்கு ஏமாற்றம் அளித்தது என்றால், அவர் சிறையிலிருந்து விடுதலையான பின், இந்து, முஸ்லீம்களிடையே ஏற்பட்ட பிரிவு, மற்றொரு அதைவிட பெருத்த ஏமாற்றமாக அமைந்தது. ஒத்துழையாமை இயக்கத்தின் நற்காலத்தில் ஏற்பட்டிருந்த இந்து-முஸ்லீம் ஒற்றுமை, இப்போது வெறும் பழங்கதையாகிப் போனது. நம்பிக்கை போய், அவநம்பிக்கைக்கு இடம் ஏற்பட்டுவிட்டது. பல நகரங்களை அவ்வப்போது பாழாக்கிய கலவரங்களைத் தவிர, அரசியலிலும், பத்திரிகைகளிலும் கூட ஒரு புது கசப்புணர்ச்சி நிலவியது. பலர் இந்தப் புதிய அழுத்தமான சூழ்நிலைக்கு ஒத்துழையாமை இயக்கத்தையும், அதனுடைய கிலாபத் இயக்கத்துடன் கூட்டுச் சேர்ந்ததையும் காரணமாகக் கொண்டதோடு, மக்களுடைய உணர்ச்சிகளோடு விளையாடி, அவர்கள் முதிர்ச்சியடையும் முன்பே, அவர்களைத் தூண்டிவிட்டதாகக் காந்தியை குற்றம் சாட்டினர். "மக்களை விழிப்படையச் செய்வது பயிற்சியின் ஒரு முக்கிய பகுதி. அவர்களை மறுபடியும் தூக்கத்தில் ஆழ்த்தக்கூடிய எதையும் நான் செய்ய மாட்டேன்" என்று காந்தி எழுதினார். எனினும், இந்த விழிப்புணர்ச்சியை ஆக்கபூர்வமான வழிகளில் திருப்பிவிட அவர் விரும்பினார். இந்த இரு சமூகத்தினரும் இத்தகைய மோசமான மனக்குழப்பத்திலிருந்து வெளிவர அவர்களுக்கு புத்தி புகட்ட வேண்டும். அவருடைய அகிம்சைக் கோட்பாடு, தேசத்தின் அரசியல் சுதந்திரத்திற்காக மட்டுமன்றி, சமுதாயங்களிடையே அமைதிக்கான திறவுகோலாக இருந்தது. மண்டைகளை உடைத்துக் கொள்வதால் மனங்களை இணைக்க முடியாது. தனிப்பட்ட பிரச்சினைகளை தீர்ப்பதற்காக வன்முறையை ஒரு வழியாக நாடாத ஒரு நாகரீக சமூகம், குழுக்களிடையேயான பிணக்கங்களை தீர்த்துக் கொள்வதிலும் கூட வன்முறையை நாடாமல் தவிர்க்க முடியும். பரஸ்பரம் சகிப்புத் தன்மையுடனும் விட்டுக்கொடுத்தும் நடந்து கொள்வதன் மூலம் கருத்து வேறுபாடுகளுக்குத் தீர்வுகாண முடியும்.

செப்டம்பர் 1924-ல் தன்னையே 'சுத்தி' செய்து கொள்ளவும், "மக்கள் தான் சொல்வதை கேட்கவைக்கும் சக்தியைத் திரும்பப் பெறவும்," காந்தி 21 நாள் உண்ணாவிரதம் இருக்க தீர்மானித்தார். இந்த உண்ணாவிரதம் ஒருவிதமான சூழ்நிலையை உண்டாக்கினாலும் அது சற்றுக்காலமே நீடித்தது. சண்டைகள் முடிவடைந்ததாகத் தெரியவில்லை உண்மையில் இரு சமூகத்தினரின் தொழில் வகுப்பினரிடையே அதிகாரத்தின் பலனை பெறுவதற்கான போராட்டமாக, இந்தப் பிரச்சனை குறுகியது. இந்திய அரசியலுக்கு ஆங்கிலேயர் போட்ட ரொட்டி துண்டுகளுக்கு ஏற்பட்ட அடிபுடியாகத்தான் அது இருந்தது.

"பெரும்பான்மையினரே சொந்த தியாகத்திற்கு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும்" என்று காந்தி கூறினார். பிற்காலத்தில் அவர் முஸ்லீம்களுக்கு கொடுத்த முழு அதிகாரம் அவர்களால் எள்ளி நகையாடப்பட்டது. இந்துக்களால் வெறுக்கப்பட்டது. ஆனால் அது, அரசாங்கத்தின் கீழ் சட்டசபை இடங்களுக்காகவும் வேலைகளுக்காகவும் ஏற்பட்ட சண்டைகளுக்கான அணுகு முறையை ஒரு சீரிய உதாரணமாக எடுத்துக் காட்டியது. துரதிஷ்டவசமாக, பேச்சுவார்த்தைகளின் போது பிரிட்டிஷ் அரசாங்கம் தேசியவாத இந்தியாவை எப்படி கையாண்டதோ, அதேபோல இந்துக்கள் முஸ்லீம்களைக் கையாளத் தலைப்பட்டனர். அவர்கள் சலுகைகள் தந்தனர். ஆனால் பல சமயங்களில் அவை மிகவும் சொற்பமாகவும் மிகவும் தாமதமாக, அளிக்கப்பட்டதாகவும் இருந்தன.

அடுத்த மூன்று ஆண்டுகளில் தேசிய அரசியலில் சமுதாய பிரச்சினைகள், சட்டமன்றத்தில் சர்ச்சைகள் ஆதிக்கம் செலுத்தின. அரசியலிலிருந்து காந்தி ஓய்வு பெற்றார். சரியாகச் சொல்வதென்றால் தனது நேரத்தை, அவ்வளவாக கவனத்தை கவராத ஆனால் அதிகமான முக்கியத்துவம் வாய்ந்த தேச ஆக்கப் பணியை "அடியிலிருந்து தொடங்க" செலவிடும் பொருட்டு அன்றாட அரசியல் சர்ச்சைகளிலிருந்து ஓய்வு பெற்றார் என்றுதான் கூற வேண்டும். புகை வண்டியிலிருந்து மாட்டுவண்டி வரை பயணத்திற்கு கிடைத்த எல்லாவித வகுப்பினருக்கும் [illegible]

[illegible] களை அவர் தொன்மையான சமூகத் தீங்குகளான பால்ய விவாகம், தீண்டாமை போன்றவற்றை உதறிவிட்டு, இராட்டைச் சக்கரம் சுழற்ற வருமாறு வற்புறுத்தினார். வெகுகாலமாக கிராமங்களில் புரையோடிப்போன போதிய வேலைவாய்ப்பின்மைக்கு ஆரம்பத்தில் தீர்வாக வலியுறுத்தப்பட்ட இராட்டை இயந்திரம் காந்தியின் கைகளில் குடிசைத் தொழிலுக்கான ஒரு சாதாரண கருவியைவிட மேலான ஒன்றாயிற்று. இராட்டை இயந்திரத்தின் நன்மைகளை மக்களுக்கு தெரிவிக்கும் முயற்சிகளில், அவர் அதை கவர்ச்சிகரமாகச் சித்தரித்தார். அவர் அதை பொருளாதார சீர்கேட்டிற்கான தீர்வாக மட்டுமல்லாது தேசிய ஒருமைப்பாடு, சுதந்திரம் ஆகியவற்றுக்கு மான அரு மருந்தாகவும் எடுத்துரைத்தார். அது அந்நிய ஆட்சியை தீவிரமாக எதிர்க்கும் சின்னமாக ஆயிற்று. இராட்டையில் நூற்ற நூலினால் ஆன கதர் ஆடை, 'காதி' தேசிய உடையாயிற்று, அதை "சுதந்திரச் சீருடை" என ஒரு சமயம் நேரு அழகாக படம் பிடித்துக் காட்டினார்.

1929-ல் இந்திய அரசியல், ஏழு வருடங்களுக்கு முன்பு ஒத்துழையாமை இயக்கம் தோல்வியை தழுவியதால் ஏற்பட்ட ஆரோக்கியமற்ற நிலையிலிருந்து மீளத் தொடங்கியது. தொழிற்சாலை ஊழியர்கள், குடியானவர்கள், நடுத்தரவர்க்க இளைஞர்கள் இவர்களிடையே நிலவிய அதிருப்தி இந்த மீட்சிக்கு உதவியது. தொழிற்சங்கங்கள் தீவிரவாத அமைப்புக்களாகின. முன்னெப்போதும் கண்டிராத பொருளாதார அழுத்தத்தால் குடியானவர்கள் துயருற்றனர். காந்தியின் சொந்த மாகாணமான குஜராத்திலுள்ள பர்தோலியில் ஒரு திடீர் இயக்கம் காந்தியின் சீரிய சீடர் வல்லபாய் படேல் தலைமையில் நடைபெற்றது. காந்தீய திட்டங்களுக்கு ஒரு மாற்றுத் திட்டத்தை பிரஸ்தாபித்த ஸ்வராஜ் கட்சி 1928ல் தெளிவு பெற்றது. கருத்து வேறுபாடுகளும், கட்சித் தாவல்களும் அதை பலவீனப்படுத்தி விட்டன.

நவம்பர் 1927 இல் பிரிட்டிஷ் அரசு 1919-ல் இயற்றப்பட்ட அரசியல் சீர்திருத்தங்கள் எவ்வாறு செயல்படுகின்றன என கண்டு தெரிவிப்பதற்கும், சுய ஆட்சி நோக்கி மேலும் முன்னேறுவதற்கான சாத்தியங்கள் பற்றி அறியவும், சர் ஜான் சைமன் தலைமையில் ஒரு ராஜ்ய கமிஷன் குழு நியமிக்கப்படுவதாக அறிவித்தது. அக் குழுவில் பிரிட்டிஷ் அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் சேர்க்கப்பட்டிருந்தனரே அன்றி ஒருவர்கூட இடம்பெறவில்லை. "அனைத்து வெள்ளையர்" குழு சுய ஆட்சிக்கு இந்தியாவிற்கு தகுதி இருக்கிறதா என வெளிநாட்டவர் அறியும் ஆர்வமிகு முயற்சியாக இந்தியாவில் கருதப்பட்டது. "ஒவ்வொரு கட்டத்திலும், ஒவ்வொரு வடிவிலும்" இந்தக் குழுவை புறக்கணிக்கவென இந்திய தேசிய காங்கிரஸ் தீர்மானித்தது. அரசாங்க ஒத்துழைப்பு சுலபமாகக் கிடைத்துவிடுமென அனுமானித்த மிதவாத மற்றும் முஸ்லீம் அரசியல்வாதிகள் கூட இக் குழுவை எதிர்ப்பதில் ஒரு மனதாக இருந்தனர்.

கன்சர்வடிவ் கட்சி அமைச்சர் பிர்கென்ஹெட் விடுத்த சவாலால் ஆத்திரமடைந்த இந்தியத் தலைவர்கள், அரசியல் பிரச்சினைக்கு ஒரு சமரச தீர்வுகாண விரும்பினர். மோதிலால் நேரு தலைமையிலான ஒரு அனைத்துக் கட்சி குழு சுய ஆட்சி இந்தியாவுக்கான அரசியல் சாசனத்தை வடித்தது. "நேரு அறிக்கை" அந்நியர் ஆட்சிக்கு உட்பட்ட சுய ஆட்சி தகுதியை தனது பரிந்துரைகளின் ஆதாரமாகக்கொண்டிருந்தது. இது காங்கிரஸ் "லிபரல்ஸ்", மற்ற அரசியல் கட்சிகளுக்கிடையே நிலவிய குறைந்தபட்ச இணக்கத்தைப் பிரதிபலித்தது.

அடுத்த இதழில் தொடரும் ..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினையின் அரசியல் தீர்வுக்கான

## ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (பத்மநாபா) முன்வைத்துள்ள பிரேரணைகள்

### அரசியல் யாப்பு சீர்திருத்தத்துக்கான அனைத்துக் கட்சி கமிட்டியினதும் நிபுணர்கள் குழுவினதும் பரிசீலனைக்கு முன்வைக்கப்பட்டவை

*(சென்ற இதழ் தொடர்சிச்சி..)*

04. குடியரசின் ஜனாதிபதியும், பிரதம அமைச்சரும்

i. மக்களால் தெரிவுசெய்யப்படும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் தேர்வு முறை தொடரப்பட வேண்டும். எனினும், ஜனாதிபதியின் பிரத்தியேக நிறைவேற்று அதிகாரங்கள் அரசியல் யாப்பு மூலம். கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

ii. (1) தேசிய பாதுகாப்பு (2) மாகாண சபைகள் சம்பந்தமான விடயங்கள் (3) வெளிநாட்டு விவகாரங்கள் (4) மத்தியவங்கி, (5) தேசிய கருவூலம் ஆகியன தொடர்பான விடயங்களைத் தீர்மானிப்பதில், ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டிருப்பார். மற்றைய சகல துறைகளுக்குமான அமைச்சர்களை, பிரதமரின் பிரேரிப்பின் பிரகாரமே ஜனாதிபதி நியமிக்கவோ, விலக்கவோ முடியும்.

iii. மத்திய பொலிஸ் திணைக்களம், பிரதம அமைச்சரின் கீழேயே செயல்பட வேண்டும்.

iv. தனது நேரடி அதிகாரத்திற்கு உட்பட்ட விடயங்களைத் தவிர மத்திய அரசாங்கம் சம்பந்தப்பட்ட மற்றைய விடயங்கள் மீது, பிரதம அமைச்சரினது அல்லது அமைச்சரவையினது ஆலோசனைகளின் பிரகாரந்தான் ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரங்களைப் பிரயோகிக்கலாம்.

v. ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு பதிலளிப்பவராகவும், கணக்குகள் காரணங்கள் காட்டுபவராகவும் இருத்தல் வேண்டும்.

vi. ஜனாதிபதியும், பிரதம அமைச்சரும், அமைச்சரவையும், மத்திய அமைச்சர்களின் சகல செயல்களுக்கும் ஒட்டு மொத்த பொதுப்பொறுப்பு உடையவர்களாவர்.

vii. வெளிநாடுகளுடன் ஏற்படுத்தப்படும் சகல ஒப்பந்தங்களும் இணக்கப்பாடுகளும், பாராளுமன்றத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்டதன் பின்னரே சட்டபூர்வமானதாகக் கொள்ளப்படல் வேண்டும்.

viii. அரசியல்யாப்பில் பிரத்தியேகமாகக் குறிப்பிட்டிருக்கும் காரணங்களுக்காகத் தவிர, பிரதம அமைச்சர் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையானோரின் ஆதர வைக் கொண்டிருக்கும்வரை, நாடாளுமன்றத்துக்கு உரியதான காலத்துக்கு ஆறு மாதங்களுக்கு முன்னர் நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்கவோ அல்லது மறு பொதுத்தேர்தலுக்கு உத்தர விடவோ முடியாது.

05. உப ஜனாதிபதி

i. உப ஜனாதிபதியானவர், ஜனாதிபதி சாராத தேசிய சமூகமொன்றினைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்.

ii. ஜனாதிபதி வேட்பாளருடன் இணைந்து போட்டியிட்டு மக்களால் தெரிவு செய்யப்படுவதன் மூலமாகவோ, அல்லது அரசியல்யாப்பின் பிரகாரம் சட்டவாக்க சபைகளின் உறுப்பினர்கள் மற்றும் பிரதேச சபையின் உறுப்பினர்களாலோ, உப ஜனாதிபதி தெரிவு செய்யப்படலாம். இரண்டாவது வழிமுறை பின்பற்றப்பட்டால், அதில், தேசிய சிறுபான்மையினங்களின் பிரதிநிதித்துவத்திற்கு அதிக வலு அளிக்கப்பட வேண்டும்.

iii. உப ஜனாதிபதி, "தேசிய சமூகங்களின் அவை" (நாடாளுமன்றத்தின் இரண்டாவது அவை) யின் கூட்டங்களுக்குத் தலைமை தாங்குவதோடு, "தேசிய திட்டமிடல், மற்றும் நிதி ஆணைக்குழு" வினது தலைவராகவும் இருத்தல் வேண்டும்..

06. இன மத சார்பற்ற அரசை நிறுவுதல்

இலங்கை பல்லின, பல்மத, பல்கலாச்சாரங்களைக் கொண்ட நாடு. நாட்டின் ஏனைய மதங்களிலும், மற்றைய நம்பிக்கை முறைமைகளிலும், ஒரு குறிப்பிட்ட மதம் மேலானதாக இலங்கையின் அரசியல்யாப்பு கருதக் கூடாது.. சகல சமய சமூகங்களிடையே பரஸ்பர நம்பிக்கைக்கும் நல்லிணக்கத்திற்கும் வழிசமைப்பதற்கான ஒழுங்குகளை அரசியல்யாப்பு கொண்டிருத்தல் வேண்டும். எந்தவொரு மதப் பிரிவுடனும் எந்தவித சார்பற்றதாகவும், முழுமையாக நடுநிலைமையானதுமாக அரசாங்கம் இருப்பது அதன் உள்ளார்ந்த எண்ணங்களிலும் செயல் முறைகளிலும் வெளிப்பட வேண்டும். இவ்விடயத்தில் அரசின் கடமையானது வெவ்வேறு நம்பிக்கைகள் கொண்ட அனைவரது அடிப்படை நலன்களையும், அபிலாஷைகளையும் பராமரிப்பதாக அமைய வேண்டும்.

07. வடக்கு-கிழக்கு மாகாணம்

7a. மாகாணஅரசின் எல்லைப் பகுதிகள் (அதிகாரப் பகிர்வுக்கான அலகு)

ஒருங்கிணைந்த வடக்கு, கிழக்கு மாகாணத்தை தமிழ்மக்கள் கோருவதன் காரணம், தமது வாழ்வையும் சொத்துக்களையும் பாதுகாப்பதற்கும், தம் அரசியல், பொருளாதார, சமூக இருப்பை பேணுதற்காகவுமே. நீண்ட காலமாக மேற் கொள்ளப்பட்ட இன பாரபட்சங்களினாலும், தொடர்ந்து இடம்பெறும் போரினாலும் ஏற்பட்ட துன்பங்களுமே தமிழர்களிடையே பாதுகாப்பற்ற உணர்வை அதிகப் படுத்தியுள்ளன. எங்களுடைய பார்வையில், தமிழர்களில அதிக பெரும்பான்மையோரினது விருப்பும் வேட்கையும், ஒரு நிலையானதும் பாதுகாப்பானதுமான வாழ்வே. வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்பை மீள ஏற்படுத்துவதன் மூலமே தமிழ் பேசும் மக்களுக்கு அரசியல் பொருளாதார மற்றும் சரீரரீதியான பாதுகாப்பை நிலைப்படுத்த முடியும். இதன் மூலமே ஒரு பலமான ஐக்கிய இலங்கை என்ற தேசத்தைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டங்களில் இலங்கையின் சகல மக்களும் சேர்ந்து செயலாற்ற வழியேற்படும்.

எனினும், வடக்கு, கிழக்கில் வாழும் முஸ்லீம், மற்றும் சிங்கள மக்களிடையே இருக்கும் நியாயமான எதிர்பார்ப்புக்கள், அச்சம் ஆகியவற்றை கருத்திற்கொண்டு, அவை தொடர்பாக பின்வரும் வழிமுறைகளை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி முன்மொழிகிறது- இது, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களின் மாகாண, மாவட்ட எல்லைகளில் சில மாற்றங்கள், அருகாமையில் அமைந்திருக்கும். அம்பாறை தேர்தல் பிரிவை ஊவா மாகாணத்துடன் இணைக்கும் சாத்தியக்கூறுகள் ஆகியவற்றை உள்ளடக்கியவையாகும். இவ் விடயத்தில், வெலிஓயா திட்டம் சம்பந்தமான பிரச்சனைகளையும் கவனத்தில் கொள்வது அவசியமாகும்.

> இது, சமூகங்களிடையே இருக்கும் பரஸ்பர சந்தேகங்கள் அச்சங்களைக் கருத்திற் கொள்வதோடு தமிழ் முஸ்லிம் மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும் வழிமுறைகளேயன்றி, சில பகுதியினரால் கோரப்படுகின்ற வகையாக வடக்கு-கிழக்கை இரண்டாகப் பிரிப்பதற்கான நடவடிக்கை அல்ல.

7b. முஸ்லீம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்த அரசியல் ஒழுங்குகள்

மத்திய அரசிலோ அல்லது மாகாண மட்டத்திலோ தங்களுடைய அபிலாஷைகளைப் பேணுவதற்கு அரசியல் அதிகாரப் பகிர்விற்கான இடைவெளி தங்களுக்கு இல்லாதிருக்கின்றது என்ற முஸ்லிம் சமூகத்தினரது கவலை நியாயமானதே. மேலும், கடந்தகாலங்களில் எல்.ரி.ரி.ஈ. யினர் முஸ்லிம்கள் மீது மேற்கொண்டு வந்துள்ள கொடுமைகளும், இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைகளும், அவர்களுடைய அச்சங்களுக்கான யதார்த்தங்களை உறுதிப்படுத்தியுள்ளன. இவற்றைக் கருத்திற் கொண்டு முஸ்லிம் மக்களைக் குறித்ததொரு விசேடமான நிலையாக நின்றுபிடிக்கக்கூடிய அரசியற் தீர்வொன்று இங்கு இன்றியமையாததாகியுள்ளது.

இதற்குரிய சாத்தியமான வடிவமைப்பானது, கிழக்கில் முஸ்லீம் மக்கள் பெரும்பான்மையினராக கணிசமாக செறிந்து வாழும் பகுதிகளை மையமாக கொண்டதாக அமைய வேண்டும். இது, சமூகங்களிடையே இருக்கும் பரஸ்பர சந்தேகங்கள் அச்சங்களைக் கருத்திற் கொள்வதோடு தமிழ், முஸ்லிம் மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும் வழிமுறைகளேயன்றி, சில பகுதியினரால் கோரப்படுகின்ற வகையாக வடக்கு-கிழக்கை இரண்டாகப் பிரிப்பதற்கான நடவடிக்கை அல்ல.

முஸ்லீம் மக்களின் தெரிவிற்கு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி முன்வைக்கும் மாற்றுப் பிரேரணைகள

வழிமுறை 1.

அம்பாறை மாவட்டம், முஸ்லிம் மக்களுக்கான ஒரு புதிய மாகாணமாக, "தென்-கிழக்கு மாகாணம்" என- மீள் வரையறை செய்யப்படுவதுடன், மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களும், வடமாகாணமும் ஒருங்கிணைந்த தனியான வட-கிழக்கு மாகாணம், பின்வருவனவற்றையும் கருத்திற் கொண்டு அமைக்கப்படுதல் வேண்டும்-

i. இம் மாகாணத்தில் வதியும் சிங்கள மக்கள் தாம் சிறுபான்மையினராகி விடுவார்கள் என்ற அச்சத்தை நீக்கும் முகமாக, அம்பாறை தேர்தல் தொகுதி, ஊவா மாகாணத்துடன் இணைவது குறித்து தீர்மானிக்கும் உரிமை வழங்கப்படுதல் வேண்டும்.

ii. தென்-கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் பெரும்பான்மையாக உள்ள பிரதேச சபைப் பகுதிகள் குறித்து முஸ்லீம் தலைவர்கள் எவ்வாறான ஏற்பாடுகளை முன்மொழிவார்களோ, அவை புதிய வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லீம்கள் பெரும்பான்மையாக உள்ள பிரதேச சபைப் பகுதிகளிலும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

வழிமுறை 2

இத் தென்கிழக்கு மாகாணத்தின் அதிகாரத்தோடு, வடக்கு-கிழக்கில் உள்ள தொடர்பற்ற முஸ்லிம் பகுதிகளான காத்தான்குடி, ஏறாவூர் நகரம், வாழைச்சேனை நகரம், கிண்ணியா, மூதூர், எருக்கலம்பிட்டி ஆகிய பிரதேச சபைகளின் பகுதிகள் நிர்வாக ரீதியாக இணைக்கப்படலாம். (இந்தியாவில் பாண்டிச்சேரி அரசுக்குட்பட்ட பகுதிகள்போல)

இங்ஙனமான வடிவமைப்பில், இப்படிப்பட்ட பரஸ்பர ஒழுங்குகளை, புதியவகையில் ஒருங்கிணைந்திருக்கும் வடக்கு-கிழக்கு மாகாணமும் [illegible] தென்-கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழர்கள் பெரும்பான்மையாகவுள்ள பிரதேச சபைப் பகுதிகளுடன் கொண்டிருத்தல் வேண்டும்.

பின்வரும் தொடர்ச்சியற்ற சில தமிழ்ப் பிரதேச சபைகள் அம்பாறை மாவட்டத்தில் இருக்கின்றன என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்-

1. கல்முனை வடக்கு, பாண்டிருப்பு, நற்பட்டிமுனை என்பன அடங்கிய ( தமிழ் ) பிரதேச சபை.
2. காரைதீவு பிரதேச சபை
3. ஆலையடிவேம்பு பிரதேச சபை
4. தம்பிலுவில் - திருக்கோவில் பிரதேச சபை

வழிமுறை 3.

முழுமையாக இணைந்த வடக்கு-கிழக்கு மாகாணத்திற்குள் ஒரு முஸ்லிம் சபையினை உருவாக்கி, அதற்கு அவசியமான குறிப்பிட்ட துறைகளில் அதிகாரங்களைப் பகிர்ந்து வழங்கி, அச்சபை அவ்வதிகாரங்களை முஸ்லீம் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேசசபைப் பகுதிகளில் செலுத்த வகைசெய்தல். .

இங்கு மேலே பட்டியலிடப்பட்டுள்ள வழிமுறைகளில் எது உகந்ததெனத் தீர்மானிக்கும் உரிமை வடக்கு- கிழக்கிலுள்ள முஸ்லீம் மக்களுக்கும், அதன் சமூக- அரசியற் தலைவர்களுக்குமே உரியதாகும்.

தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் தொடர்ச்சியற்ற பிரதேசங்கள் சம்பந்தப்பட்ட நெறி முறைகளுக்கான பரஸ்பர ஒழுங்குகளின் விபரங்களை, தமிழ்த் தலைவர்களும், முஸ்லீம் தலைவர்களும் பேச்சு வார்த்தைகள் மூலம் வகுத்துக் கொள்ள வேண்டும். மற்றைய சமூகத்தின் பிரதேசத்திற்குள் அடங்கும் இன்னொரு சமூகத்தின் விவசாய நிலங்கள் பற்றிய ஒழுங்குகள் பற்றியும் இப்பேச்சுவார்த்தைகள் மூலம் நெறிமுறைகள் உருவாக்கப்படுதல் வேண்டும்.

தேசிய சிறுபான்மை சமூகங்களின் அடிப்படை ஜனநாயக அபிலாஷைகளையும் நலன்களையும் பேணும் முகமாக, மாகாணங்களின் எல்லைகள் மீள் வரையறுக்கப்பட வேண்டியது அத்தியாவசியமானதாகும்.

7c. நிலப்பரப்புகளை மீள் வரைதல

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இணைப்புத் தொடர்பாக மக்கள் கருத்துக்கணிப்பொன்றை வைப்பதற்கான முயற்சியானது, பல்வேறு சமூகங்களிடையே பிரிவையும் பகைமையையும் மேலும் ஆழமாக்கி விஸ்தரிக்கும் என்பதில் சந்தேகமில்லை. இத்தகைய கருத்துக்கணிப்பு பல பக்கங்களிலும் இருக்கும் தீவிர இனவாதசக்திகள் பதட்டங்களையும் அச்சங்களையும் கிளறிவிடுவதற்கே உதவும்.

மாகாண எல்லைகள், முன்னைய காலனித்துவ ஆட்சியாளர்களால் நிர்வாக வசதிக்காக வரையறுக்கப்பட்ட பூகோளப் பகுதிகளேயாதலால் அவற்றில் புனிதம் எதுவுமில்லை. இந்த மாகாண எல்லைகளுக்கு அரசியல் அந்தஸ்து அளிக்கப்பட்டதே 1987ல் ஏற்படுத்தப்பட்ட அரசியல் அமைப்பின் 13வது திருத்தத்தின் மூலந்தான்.

1957ம் ஆண்டின் பண்டா-செல்வா ஒப்பந்தமும், 1965ன் டட்லி-செல்வா ஒப்பந்தமும், அரச உதவிகளுடன் ஏற்படுத்தப்பட்ட குடியேற்றங்களால் உருவாகிய இனங்களுக்கிடையேயான பதட்டங்களைத் தணிப்பதற்கானதாகக் கருதப்பட்டவை என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். இவ் ஒப்பந்தங்கள் அமுலாக்கப்பட்டிருப்பின், வடக்கு-கிழக்கைப் பிரிப்பதா அல்லது இணைப்பதா என்ற கேள்வியே எழுந்திருக்காது. வடக்கு-கிழக்கு இணைப்புக் கோரிக்கையானது, அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களின் பாதகமான விளைவுகளைச் சமன் செய்ய எழுந்த ஒன்றே.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, 1970களிலிருந்து அரசினால் செயற்படுத்தப்பட்ட குடியேற்றங்களை கலைத்து விடுவதாக, திருமதி. சிறீமாவோ பண்டாரநாயக்காவும் 1988ம் ஆண்டில் தனது ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியளித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

7d. அம்பாறை தேர்தல் பிரிவை அடுத்துள்ள மாகாணத்துடன் சேர்த்தல்

வடக்கு-கிழக்கு மாகாணத்திலிருந்து அம்பாறை தேர்தல் பிரிவைத் தனியாக்கி, அதனது பொலீஸ் நிர்வாகம், நீதிமன்ற நிர்வாகம் ஆகியவற்றை, தற்போது கண்காணித்து வரும் ஊவா மாகாணத்துடன் இணைத்துவிடலாம் என்ற யோசனையை, ஈ.பி.ஆர்.எல்.எவ். இங்கே முன்வைக்கின்றது.

அம்பாறைத் தொகுதியின் சிங்களப் பெரும்பான்மையானது சமூகங்களிடையே பதட்டங்களை சிருஷ்டிப்பதற்கும், தமிழ் மக்களதும் முஸ்லிம் மக்களதும் அடிப்படை அரசியல் இருப்பை நலிவாக்குவதற்கும், கருவிகளாக உபயோகிக்கப்படுவதனாலேயே மேற்குறிப்பிட்ட கோரிக்கை எழுகின்றது. மேலும் அம்பாறை தேர்தல் பிரிவிலுள்ள சனத்தொகையில் மிகப்பெரும்பன்மையானோர், அதே மாவட்டத்திலுள்ள மற்றைய பகுதிகளின் இனங்களோடு ஓர் அர்த்தமுள்ள சமூக, அரசியல் உறவைக் கொண்டிருக்கவுமில்லை.

அடுத்த இதழில் தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை தலித் மேம்பாட்டு முன்னணி விடுத்துள்ள

# தலித் அறிக்கை

**இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக தீவிரமாக பேசப்பட்டு வரும் வேளையில் வடக்கு கிழக்கில் காலம் காலமாக அடக்கி ஒடுக்கப்பட்டு வரும் தலித் மக்களின் பிரச்சினைகள், அதற்கான தீர்வுகள் குறித்தும் பேசப்பட வேண்டும் என தலித் மக்களின் மேம்பாட்டுக்காக குரல் கொடுத்துவரும், பிரான்ஸை தளமாக கொண்டு இயங்கும் இலங்கை தலித் மேம்பாட்டு முன்னணி தெரிவித்து வருகின்றது. இதுகுறித்து 12.11.20006 இல் அவர்கள் வெளியிட்டுள்ள எழுத்து மூல ஆவணமான தலித் அறிக்கை எமது சென்ற இதழில் பிரசுரமாகியிருந்தது. அதன் மற்றொரு பகுதி இந்த இதழில் வெளியிடப்படுகின்றது.**

காலம்காலமாக இறந்த தலித்துக்களின் உடல்களை எரிப்பதற்கு உரிமையற்று இருந்தவேளை யாழ்ப்பாண வில்லூன்றி மயானத்தில் தலித் பெண் ஒருவரின் உடல் எரிக்கப்பட வேண்டுமென தலித்துக்கள் மேற்கொண்ட போராட்டத்தில் அவ் உடலை எரிக்கவிடாது சாதி வெறியர்கள் தடுத்தனர். அந் நிகழ்வானது பெரும் கலவரமாக தோற்றம் பெற்று அதில் உயர் சாதியினரின் துப்பாக்கி சூட்டிற்கு முதலி சின்னத்தம்பி என்னும் தலித் இளம் குடும்பஸ்தர் கொல்லப்பட்டு சாதிப் போராட்டக் கலவரத்தில் முதல் தியாகி ஆனார். இச் சம்பவத்தை லண்டன் மகாராணிக்கு தந்தி மூலமாக தெரிவித்து பின்பு மகாதேசாதிபதியின் அனுமதியுடன் மேற்படி சடலம் எரிக்கப்பட்டது.

1940ம் ஆண்டு காலங்களில் தலித் மக்களிடையே பெரும் விழிப்புணர்ச்சி ஏற்பட்டு யாழ்குடா நாடெங்கும் பலவித ஸ்தாபனங்களை உருவாக்கி தமது போராட்டங்களை விரிவுபடுத்தினர். இவைகளில் யாழ்ப்பாண நகரில் மையப்படுத்தப்பட்டு பல தலித் தலைவர்கள் சந்தித்து உறவுகளை வலுப்படுத்தவும், போராட்டங்களை வலுப்படுத்தவும் பெருவியாக செயல்பட்டது சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கமாகும்.

இலங்கையில் 1931 இல் சர்வசன வாக்குரிமை அமுலுக்கு வந்தபோது தமிழ்த் தலைவர்களின் பிரதிநிதியாக விளங்கிய சேர் பொன் இராமநாதன் தலித்துக்களுக்கு வாக்குரிமை வழங்கக்கூடாது என டொனமூர் ஆணைக்குழு முன் சாட்சியமளித்த வரலாறும் நாம் மறந்து விடக்கூடிய ஒன்றல்ல. 1942இல் சன் மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கத்தினால் வட இலங்கையில் உள்ள சகல தலித்துக்களின் நலனையும், ஐக்கியத்தையும் கட்டிக்காக்க ஒரு பொதுவான அமைப்பை உருவாக்க வேண்டும் எனும் நோக்கில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், 1943 இல் மிகப் பெரும் தலித் மாநாடு கூட்டப்பட்டு அம் மாநாட்டில் சிறுபான்மைத் தமிழர் மகாசபை என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டு யோவே போல் தலைவராக நியமிக்கப்பட்டார். இம் மகாசபையானது கல்வி வாய்ப்பு, ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைத் தெரிவு, உத்தியோக வாய்ப்பு, சீவல் தொழிலாளர்களின் மேம்பாடு போன்றவைகளுடன் பொருளாதார முன்னேற்றம் போன்ற அனைத்திலும் தலித் மக்களின் எதிர் கால வளர்ச்சி குறித்து போராடி வந்தது.

இம் மகாசபையின் 1944 ம் ஆண்டில் நிகழ்ந்த இரண்டாவது மாநாட்டில் தலித் மக்களின் இன்னல்களையும் ஒடுக்கு முறைகளையும் தீர்ப்பதற்கு ஏதுவாக தலித்துக்களுக்கான தனித் தொகுதியை ஒதுக்கியோ, அன்றி நியமனப் பிரதிநிதித்துவம் மூலமான பதவிகளும், மாவட்ட மக்கள் விகிதாசாரத்தின்படி 25 வீதமான இடமும், தலித் மக்களின் விகிதாசாரத்திற்கேற்ப மக்கள் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டு அத் தீர்மானம் இலங்கை அரசிற்கு அனுப்பி வைக்கப்பட்டது. 1945இல் நடைபெற்ற மகாசபை மாநாட்டில் மீண்டும் பரிசீலிக்கப்பட்டு அதற்கான தனி ஆணைக்குழு நியமிக்கக் கோரியும் சகல ஸ்தாபன சபைகளிலும் பிரதிநிதித்துவம் கிடைக்கக்கூடிய வகையில் வட்டாரங்கள் பிரிக்கப்பட வேண்டுமெனவும், கல்வி பிரச்சனையில் முஸ்லீம் மக்களுக்கு அளித்த விசேட சலுகைகளை தலித்துக்களுக்கும் வழங்க வேண்டுமெனக் கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

1945இல் இலங்கை அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்வதற்காக நியமிக்கப்பட்ட சோல்பரி ஆணைக்குழு இலங்கை வந்தபோது மகாசபை சார்பில் தலித் மக்கள் பிரச்சனை பேசப்பட வேண்டுமென தீர்மானித்து எடுக்கப்பட்ட முயற்சிகள் ஜீ.ஜீ பொன்னம்பலத்தினால் முறியடிக்கப்பட்டிருந்தது. சாதிப் பிரச்சனைகள் எதுவும் பெரிதாக நடைபெறவில்லை எனவும், தமிழர்கள் அனைவரும் நாம் ஒற்றுமையாக வாழ்கிறோம். எனவும் சோல்பரி ஆணைக்குழு முன் பேச முனைந்த ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் நரித்தனத்திற்கு பணிந்து, தயங்கிவிடாமல் மகாசபையானது சோல்பரி ஆணைக்குழுவை முன் உயர்சாதிக் கொடுமைகளை விபரித்தது மட்டுமல்லாது, அக்காலத்தில் கரவெட்டியிலுள்ள கன்பொல்லைக் கிராமத்தில் நிகழ்ந்த சாதிக் கலவரத்தின் அனர்த்தங்களையும் விபரித்து சோல்பரி ஆணைக் குழுவை அழைத்து வந்து நேரில் பார்வையிட வைத்தனர்.

இதனால் ஆத்திரம் கொண்ட உயர்சாதி வெறியர்கள் சோல்பரி ஆணைக்குழு உறுப்பினர்களை கன்பொல்லைக்கு அழைத்துவரக் காரணமாயிருந்த மகாசபை பிரதிநிதிகளான எம்.சி. சுப்பிரமணியம் கணபதிபிள்ளை, டி.ஜேம்ஸ் ஆகியோரை வழிமறித்து தாக்கினர். இருப்பினும் அவர்கள் மயிரிழையில் உயிர் தப்பினார்கள். மகாசபை மூலம் முன்னெடுக்கப்பட்ட போராட்ட முயற்சிகள் யாவையும் ஜீ.ஜீ. பொன்னம்பலம் போன்ற உயர்சாதி நரியர்கள் தமது சதித் திட்டங்கள் மூலம் சிதைக்க முற்பட்டனர். சோல்பரி ஆணைக்குழுவும் பிற்பாடு தலித் மக்களின் அவல நிலைமைகளை கவனத்தில் கொள்ளாது உயர் சாதியினரால் உருவாக்கப்பட்ட தேசவழமைச் சட்டத்திற்குள் தலித்துக்களை கட்டிப்போட்ட நிலை தொடரக் காரணமாகிப் போனது. (அதுவே இன்றும் தொடர்கிறது)

1948 இல் சுதந்திரம் என்ற பெயரில் பிரித்தானிய அரசு இலங்கையில் இருந்த முதலாளித்துவத்தின் வாரிசுகளான சிங்கள உயர் வர்க்கத்தினரிடமும், யாழ் உயர் மேலாதிக்க சாதியினரிடமும் அரசியல் சமூக அதிகாரங்களை ஒப்படைத்துவிட்டுப் போக தொடர்ந்தும் தலித்துக்கள் தங்கள் போராட்டத்தினை இடதுசாரி சிந்தனையாளர்களின் கருத்தியலின் நம்பிக்கையில் தமது போராட்டத்தை புதிய நோக்கில் முன்னெடுத்துச் சென்றனர். 1955 இல் காணி அமைச்சினால் நிறை வேற்றப்பட்ட குடியேற்றத் திட்டங்களில் தலித்துக்களுக்கும் காணிகள் வழங்கப்பட வேண்டுமெனும் கோரிக்கையை மகாசபை உறுப்பினர்கள் காணி அமைச்சரிடம் நேரில் கையளித்தனர். 1956 இல் மகாசபையின் தொடர்ச்சியான போராட்டத்தின் பலனாய் நல்லூர் கந்தசாமி கோவில் நுழைவு அனுமதி தலித் மக்களின் வழிபாட்டிற்கு திறந்து விடப்பட்டது. தொடர்ந்தும் தங்களது தீண்டாமை கொடுமைக்கெதிரான போராட்டங்களை முன்னெடுத்து வந்ததை யாழ்ப்பாண உயர்சாதி வெறி உணர்வு கொண்ட ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் தமிழ் காங்கிரஸ் கட்சியாகட்டும், எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் தலைமையிலான தமிழரசுக் தமிழரசு கட்சியாகட்டும் தலித் போராட்ட வளர்ச்சியை சகிக்க முடியாமல் மகாசபையை பிரிக்கும் சதிமுயற்சியிலும் ஈடுபட்டனர். 1957 இல் யாழ்ப்பாணம் விஜயம் மேற்கொண்ட எம்.பி.டி. சொய்சா அவர்களுக்கு தமிழரசு கட்சியானது கறுப்புக் கொடிகாட்டியும், பறைமேளம் அடித்தும் தமது எதிர்ப்பினை காட்டினர். இச் சம்பவமானது மகாசபைகளுக்குள்ளும் குழப்பத்தை ஏற்படுத்தியது. மகாசபை உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் தமிழரசுக் கட்சியின் சதி வலையில் சிக்கி தலித் போராட்டத்தை நிலை குலையச் செய்தனர். இருப்பினும் மகாசபையின் நீண்டகால கோரிக்கையான சமூக குறைபாடுகள் ஒழிப்புச் சட்டம் (தீண்டாமை) பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்தில் சட்டமாக்கப்பட்டதுடன் மீண்டும் 1971 இல் இச் சட்டமானது திருத்தமாக்கப்பட்டு அதற்கான தண்டனைகளான அபராதங்களும், சிறைக்காலங்களும் அதிகப்படுத்தப்பட்டது.

தொடர்ந்தும் 1956 தொடக்கம் 1960 வரையிலான மகாசபையின் போராட்டத்தினால் சண்டிலிப்பாய், கரவெட்டி, மட்டுவில். கட்டுவன்புலம், புலோலி, மந்துவில் ஆகிய பகுதிகளில் 19 பாடசாலைகள் தலித்துக்களுக்காகவே உருவாக்கப்பட்டன. சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் மூலமாக தீண்டாமைக்கு எதிராகவும் தலித்துக்களின் வாழ்வியல் மேம்பாட்டிற்காகவும் பல போராட்டங்களை நடத்தியபோதும் அரச துறைகளில் யாழ் சைவ வேளாள சாதியினரே தலைமை பொறுப்புக்களில் இருந்து வந்தமையால், நடைமுறையில் தலித் மக்களின் தேவைகள் அதிகம் நிறைவேற முடியாது போயின. இதன் விளைவால் 1967 இல் தலித்துக்கள் பௌத்த மதம் மாறுவது என முடிவெடுக்கப்பட்டு பல கிராமங்களில் இருந்து தோழர் யோகரட்ணம் உட்பட (புகலிடத்தில் வாழும் தீண்டாமை ஒழிப்புக் களப் போராட்டங்களின் சாட்சிகளில் ஒருவர்) அனைத்து இலங்கை பௌத்த காங்கிரஸ் தலைவராக இருந்த வைரமுத்து தலைமையில் நூறு தலித் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு தென்னிலங்கைக்கு அனுப்பப்பட்டனர். இதனைத் தொடர்ந்து கன்பொல்லை, கரவெட்டி, புத்தூர், பூநகரி ஆகிய கிராமங்களிலும் பௌத்த பாடசாலைகள் உருவாக்கப்பட்டன.

(மிகுதி அடுத்த இதழில் தொடரும்...)

# யாழ் குடாநாட்டை உலுக்கும் படுகொலைகள்

## ஒரே மாதத்தில் 30 பேர் கொலை 15 பேரை காணவில்லை

புலிகள் ஆரம்பித்து வைத்த "கொலை" கலாச்சாரம் வேரூன்றி வியாபித்து யாழ் குடாநாட்டு மக்களை உலுக்கிக்கொண்டிருக்கின்றது. படுகொலைகள் என்றுமில்லாத உச்சத்தை தொட்டுக்கொண்டிருக்கின்றது. அத்துடன் கடத்தப்படுவதும், காணாமற்போவதும் மக்களிடையே மேலும் பீதியை உண்டு பண்ணியுள்ளது. கடந்த மாதத்தில் மட்டும் கொல்லப்பட்டவர்களின் தொகை நிலமையை பிரதிபலிப்பதாயும், பாரதூரத் தன்மையை வெளிப்படுத்துவதாயுள்ளது. தினசரி ஒருவர் கொல்லப்பட்டால் அந்த சமூகத்தின் நிலை என்னாகும்? இவ்வாறு ஒரு சமூகம் வேரறுக்கப்படுவதை தடுத்து நிறுத்துவது சமூகத்தை நேசிக்கும் அனைவரதும் கடமையல்லவா?



கடந்த ஆகஸ்ட் மாதத்தில் மட்டும் யாழ் மாவட்டத்தில் 30 பேர் கொல்லப்பட்டுள்ளனர். துப்பாக்கிப் பிரயோகத்தின் போது இருவர் படுகாயங்களுடன் உயிர்தப்பியுள்ளனர். சுட்டுக் கொல்லப்பட்டவர்களில் 24 பேர் மட்டும். அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் அனேகமானவர்கள் அவர்களது வீடுகளிலும், தொழில் புரியும் இடங்களிலும் வைத்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் எஞ்சிய 6 பேர் அடையாளம் காணப்படவில்லை. நெடுந்தீவு கடற்கரை பகுதியில் கைகளும், கால்களும் இல்லாத முண்டம் ஒன்று மீட்கப்பட்டது. கோப்பாய் கிருஸ்ணன் கோவிலுக்கு சமீபமாக சூட்டுக்காயங்களுடன் சடலம் ஒன்று மீட்கப்பட்டது. முகா முக்குள் நுழைய முயன்ற இருவரையும், கைக்குண்டு வீச முற்பட்ட ஒருவரையும் சுட்டுக் கொன்றதாகவும், மற்றொரு சடலத்தை ஆயுதங்களுடன் படகொன்றிலிருந்து மீட்டதாகவும் படையினர் தெரிவித்திருந்தனர். இச் சடலங்கள் எதுவும் அடையாளம் காணப்படவில்லை.

*படுகொலை செய்யப்பட்டவர்களில் 15 பேர் 30 வயதுக்கு உட்பட்டவர்கள் இருவர் பெண்கள் 6 பேர் 50 வயதுக்கு மேற்பட்டவர்கள்.*

இந்தபடுகொலைகளை படையினருரும், புலிகளால் துணைப்படைகள் என்று தூற்றப்படும் இயக்கங்களுமே மேற்கொள்வதாக புலிகள் குற்றஞ்சாட்டி வருகின்றபோதும் நடைபெறும் கொலைகளுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் காரணமானவர்கள் புலிகளே.

இது தவிர யாழ் குடாநாட்டில் ஆகஸ்ட் மாதத்தில் மாத்திரம் 15 பேர் காணாமல் போயுள்ளனர். 5 பேர் கடத்தப்பட்டுள்ளனர். 21 பேர் உயிர் அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறி பாதுகாப்பு கோரி சரணடைந்துள்ளனர். இவ்வாறு யாழ் மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்திற்குச் சென்று அடைக்கலம் கோரியவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவின்படி அரசின் சிறைச்சாலையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். தஞ்சம் கோரி சரணடைந்த குடும்பங்களில் பெண்களும், சிறுவர்களும் சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இராணுவ முகாம்களுக்கு மத்தியிலாயினும் தத்தமது வீடுகளில் வாழ்ந்த மக்களை திறந்தவெளி சிறைச்சாலையில் அகப்பட்டிருப்பதாக பிரச்சாரம் செய்து அரசியல் ஆதாயம் தேடிய புலிகளும், கூட்டமைப்பு எம்பிக்களும் அந்த மக்கள் சிறையினுள்ளேயே வாழ வேண்டிய நிலையை தோற்றுவித்துள்ளனர்.

# ஊடகங்களின் பணி

ஊடகம் என்பது சில தார்மீக நெறிமுறைகளை கொண்டது. இயலுமானவரை மக்களுக்கு உண்மையான தகவல்களை கிட்டச் செய்வது ஊடகங்களின் பணி எனலாம். உலகம் சுருங்கிவரும் இக் காலத்தில் தகவல் தொழில்நுட்பம் மிகப் பிரமாண்டமாக மாறியிருக்கும் நிலையில் ஊடகங்களின் பொறுப்பும் கடமைகளும் அதிகமாகின்றன.

ஆனால் இந்த அளவு ரீதியான அதிகரிப்பின் விளைவு யாரும் எதையும் எப்படி வேண்டுமானாலும் எழுதலாம், சொல்லலாம் என்று ஆகிவிட்ட அவல நிலையொன்று காணப்படுகிறது.

ஒரு அராஜகம் ஊடகத்துறையில் நிலவுகிறது. இலங்கையில் குறிப்பாக தமிழ் ஊடகங்களில் தமிழ் பாசிசத்தின் செல்வாக்கு அதிகமாக காணப்படுகிறது. அது வெவ்வேறு அளவுகளில் ஆங்கில ஊடகங்களிலும் ஊடுருவியிருப்பதைக் காணலாம்.

தமிழ் பாசிசத்தின் செல்வாக்குக்கு உட்பட்ட ஊடகங்கள், ஊடகவியலாளர்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் புலிகளின் படுகொலைகளையும் ஜனநாயக விரோத செயற்பாடுகளையும் நியாயப்படுத்துவதை பரவலாக அவதானிக்கலாம். அவர்கள் மீண்டும் அதிகாரத்தை ஸ்தாபிப்பதற்கான கருத்துக்களையே அவர்கள் இடையறாது வலியுறுத்துவர். இனங்களிடையே, சமூகங்களிடையே அரசியல் ஸ்தாபனங்களிடையே புலிகளின் நிலைப்பாட்டிலிருந்து விரோதங்களையும், குரோதங்களையும் ஏற்படுத்துவதற்கான முயற்சிகளில் இவர்கள் இடையறாது ஈடுபட்டிருப்பார்கள்.

சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் புலிகளுக்குத் துதிபாடத் தவறுவதில்லை. மனித உரிமைகள் என்று வரும் போதும் அவை புலிகளுக்கு அசௌகரியமானவையாக, முகம் சுளிப்புக்குரியவையாக இருந்தால் அதனை தவிர்த்துவிடுவார்கள். நியாயப்படுத்தவும் செய்வார்கள்.

கலாநிதி நீலன் திருச்செல்வம், தோழர் றொபேட், முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், தோழர் கேதீஸ் லோகநாதன் ஆகியோரின் படுகொலைகளை நியாயப்படுத்துவதற்கு புலிகள் தமது ஊதுகுழல்கள் மூலம் மேற்கொண்ட முயற்சிகள் நாம் அறியாததல்ல.

உண்மையில் இந்த பாசிச முகவர்கள் ஊடகவியலாளர்கள் அல்ல. இவர்கள் தமிழ் பாசிசத்தின் பிரச்சாரகர்கள். இவர்கள் நேரடியாக பாசிச செயற்பாடுகளில் ஈடுபடும் புலிகளை விட ஆபத்தானவர்கள். இவர்கள் சமூகத்தினுள் பாசிச கருத்தியலை முன்கொண்டு செல்கிறார்கள். இதன் மூலம் சமூகத்தினுள் இரத்தக்களரி மோதல்களுக்கான சூழ்நிலையை தக்க வைக்கிறார்கள்.

உதாரணமாக 26-08-2007 சண்டே டைம்ஸ் ஆங்கில வார இதழில் கருணா குழுவினரை ஓரங்கட்டுவதற்காக மூன்று கட்சியினரை கொண்ட குழுவினரை அரசு கிழக்கிற்கு அனுப்பியுள்ளதாக மகுடமிட்டு தலைப்பு செய்தியொன்று வெளியிடப்பட்டிருந்தது.

இந்தச் செய்தியின் உண்மைத் தன்மையை வேறு தகவல் எதுவும் இல்லாத பகுத்தறிவுள்ள எந்த வாசகரும் புரிந்து கொள்ள முடியும். கருணா அணியினரை (ரி.எம்.வி.பி) ஓரங்கட்டுவதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி- பத்மநாபா ஆகிய கட்சிகளின் தலைவர்களை கிழக்கிற்கு ஹெலிகொப்டர் வசதிசெய்து கொடுத்து அனுப்பியதாக அச் செய்தி அமைந்திருந்தது. இந்த செய்தியின் நோக்கம் மோதலொன்றை உருவாக்குவது. இரண்டாவது கிழக்கிற்கு இக் கட்சியினர் மேற்கொண்ட முயற்களை கொச்சைப்படுத்துவது. மூன்றாவது புலிகளையும், புலிகளின் முகவர்களையும் தவிர்ந்த வேறு எவரும் தமிழ் மக்கள் மத்தியில் செயற்படக் கூடாது என்ற ஜனநாயக விரோத நிலைப்பாடு.

உண்மையில் இந்த செய்தியை எழுதியவர் மாத்திரமல்ல பல ஊதுகுழல் பாசிச எழுத்தாளர்கள் புலிகளின் உபகார சம்பளம் பெறுகிறார்கள். அது இலங்கையில் மாத்திரமல்ல உலகின் பல பகுதிகளிலும் நிகழ்கிறது.

இவர்களுக்கு வடக்கு கிழக்கின் சமூகங்கள் நாளாந்தம் அனுபவிக்கும் துயரங்கள் ஒரு பொருட்டல்ல. ஆயுத வியாபாரிகள், போதைவஸ்த்து வியாபாரிகள் போல் இவர்களும் பாசிச ஊடக பொறுக்கிகள்.

இலங்கையில் இனப்பிரச்சனை தீர்க்க முடியாமல் இழுபட்டு செல்வதற்கும், வன்முறையும் குரோதமும் அதிகரித்துச் செல்வதற்கும் இவர்களை போன்றவர்களின் பங்கும் குறைத்து மதிப்பிட முடியாதது.

எமது சமூகத்தில் பொறுப்புணர்வுமிக்க கண்ணியமான ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்களின் தேவை மிக அதிகமாக இருக்கிறது. மனித உரிமை, சகிப்புத்தன்மை, இன சமூகங்களின் ஐக்கியம், ஜனநாயகம் இவற்றை வலியுறுத்தி எழுதுவதற்கு ஆட்கள் அதிகமாகவே தேவைப்படுகின்றார்கள். மனதினில் ஒளியுண்டானால் வார்த்தையில் ஒளியுண்டாம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மகத்தான வாழ்வுக்கு ஏங்கும் மனிதர்கள

மட்டக்களப்பு, திருமலை பிரதேசங்களில் மாவிலாறு தொடக்கம் குடும்பிமலை வரை நிகழ்ந்த சண்டைகளைத் தொடர்ந்து சுமார் இரண்டு லட்சம் மக்கள் வரை கடந்த வருடம் ஆகஸ்ட் மாதத்திலிருந்து இடம் பெயர்ந்திருக்கிறார்கள். இவர்களில் இருபதினாயிரம் பேர்வரை தமிழகத்திற்கும் மேலும் பலர் நாட்டின் வெவ்வேறு பகுதிகளுக்கும் இடம் பெயர்ந்திருக்கிறார்கள்.

மட்டக்களப்பிலிருந்து இடம் பெயர்ந்த மக்களில் மிக கணிசமான பகுதியினர் தமது சொந்த இடங்களில் மீளக்குடியேற்றப்பட்டிருந்தாலும் அவர்கள் பல ஜீவாதாரத் தேவைகளை பற்றாக்குறைகளை எதிர்நோக்கி நிற்கிறார்கள். அவர்களுக்கு வீடு, தொழில், சுகாதாரம், போக்குவரத்து, குடிநீர், கல்வி என பல்வேறு சவால்களை எதிர்நோக்கி நிற்கிறார்கள். முதலாவது விடயம் அன்றாட வாழ்வை எவ்வாறு ஓட்டுவதென்பது.

அண்மையில் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் திரு. ஆனந்தசங்கரி அவர்களின் தலைமையிலான மூன்று கட்சிகளின் கூட்டணியினர் இங்கு விஜயம் செய்தபோது வாகரையில் மீள்குடியேற்றப்பட்ட மக்களில் ஒரு பகுதியினர் அரச திணைக்களங்களின் தலைவர்கள், பொலிஸ், படை அதிகாரிகள், உள்ளூர் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், சமயத் தலைவர்கள், உள்ளூர் முஸ்லீம், தமிழ் சமூகத் தலைவர்கள், அரச ஊழியர்கள் ஆசிரியர்கள் என பல்வேறு தரப்பினரையும் சந்தித்து மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடினர். இக்கலந்துரையாடலில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி-பத்மநாபா, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், ஆகிய கட்சிகளின் தலைவர்களும் உறுப்பினர்களும் பங்குபற்றினர்.

கால் நூற்றாண்டுகால யுத்தம், சுனாமி அனர்த்தம் இவற்றின் சாயல்கள் அடையாளங்கள் வாழும் மனிதர்களில் காணப்படுகின்றன. தேவைகள் மிகப் பிரமாண்டமானவை. அந்த தேவைகளை பூர்த்தி செய்ய பாரியளவில் புனர்நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதேபோன்று தற்போது வன்னிப் பகுதியிலும் மக்களின் இடம்பெயர்வுகள் ஆரம்பித்துள்ளன. யுத்த நடவடிக்கைகள் தொடரும் போது இது தவிர்க்க முடியாமல் பாரியளவில் நிகழலாம். சிலாவத்துறை, அரிப்பு ஆகிய பகுதிகளில் இருந்து மக்கள் இடம் பெயர்ந்து நானாட்டான், முருங்கன் அரச கட்டுப்பாட்டு பகுதிகளுக்கு மக்கள் வந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் நிலைமைகளில் சுதந்திரமான தடையற்ற போக்குவரத்து வசதி இருக்குமானால் 50 சத வீதத்திற்கு மேற்பட்டோர் அங்கிருந்து வெளியேறி விடுவார்கள்? வன்னியில் இருந்து வெளியே செல்வதற்கு தடையேதும் இல்லாமல் இருக்குமானால் 60 வீதத்திற்கு மேற்பட்டோர் அங்கிருந்து வெளியேறிவிடுவார்கள் ? என கருதுமளவிற்கு மக்களின் வாழ்வு அவர்களின் சொந்த இடங்களில் நரகமாகிவிட்டது.

ஜனநாயகம், மனித உரிமை பொருளாதார தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான கட்டுமானம் ஜீவாதாரத் தேவைகளை தங்குதடையின்றி பெற்றுக்கொள்ளல் என்பன மிகவும் சவாலான விடயமாகிவிட்டன.

மட்டகக்ளப்பு பகுதியில் தொழில் நடவடிக்கைகள் பாரியளவில் ஸ்தம்பிதமடைந்து விட்டன. இடம்யெர்ந்த மக்களில் ஒரு பகுதியினர் இன்னும் முகாம்களிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

யாழில் விலைவாசி ஒரு பெரும் சவாலாக உருவாகியுள்ளது. பலநோக்கு கூட்டுறவு சங்க கடைகளிலும், தனியார் கடைகளிலும் கொழும்பு சந்தையிலும் விற்பனை செய்யப்படும் அத்தியவசியப் பொருட்களின் விலைகளை நோக்குவோம்

| பொருட்கள் | ப.கூ.சங் | தனியார் | கொழும்பு |
|---|---|---|---|
| சம்பா அரிசி (1 கிலோ) | 54.00 | 85-90.00 | 48.00 |
| நாட்டரிசி (1 கிலோ) | 60.00 | 110.00 | 55.00 |
| கோதுமை மா (1 கிலோ) | 60.00 | 75-80.00 | 50.00 |
| சீனி (1 கிலோ) | 60.00 | 72-80.00 | 55.00 |
| மீன் ரின் | 127.00 | 130.00 | 125.00 |
| உப்பு (1 கிலோ) | 60.00 | 75.00 | 20.00 |
| அங்கர் (400 கிராம்) | 195.00 | 240.00 | 210.00 |
| லக்ஸ்பிறே (400 கிராம்) | 195.00 | 220.00 | 195.00 |
| நெஸ்பிறே (400 கிராம்) | 195.00 | 220.00 | 175.00 |
| செத். மிளகாய் (1 கிலோ) | - | 300.00 | 320.00 |
| உழுந்து (1கிலோ) | | 160.00 | 120.00 |
| ரவை (1 கிலோ) | 100.00 | 130.00 | 90.00 |
| கடலை (1 கிலோ) | | 148.00 | 140.00 |
| சன்லைட் | 26.00 | 30.00 | 22.50 |
| லக்ஸ் | 27.00 | 30.00 | 25.00 |
| மண்ணெண்ணெய (1லீட்டர்) | 77.00 | 90.00 | 68.50 |
| மரக்கறி எண் (1லீட்டர்) | | 300.00 | 175.00 |
| பற்றரி (ஒரு சோடி) | | 100.00 | 80.00 |
| பாண் (450 கிராம்) | | 40.00 | 30.00 |
| குளிர்பானம் (1.5 லீட்) | 160.00 | 190.00 | 125.00 |
| கோழி இறைச்சி (1 கிலோ) | | 750.00 | 300.00 |
| முட்டை | | 25-30.00 | 9.00 |
| தேங்காய் | | 45-70.00 | 25.00 |
| சீமெந்து | | 1715.00 | 650.00 |

இந்த விலைவாசிகள் இலங்கையின் தேசிய மட்டத்தின் நிலவும் விலைவாசிகளுடன் பாரியளவில் முரண்படுகிறது. யுத்தத்தின் பாரிய சுமைகளை கிழக்கு வடக்கில் உள்ள மக்களே சுமக்கின்றனர். அவர்களில் ஒரு கணிசமான பகுதியினர் மரங்களின் கீழும் தார்ப்பலின் சீலைகளின் கீழும் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள்.

எல்லாவற்றையும் விட மக்களின் வாழ்வு முக்கியமானது. இதனை சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் புரிந்துகொள்ள வேண்டும். எப்போதும் அதிகார போதையில் இருக்கும் பாசிச புலிகளுக்கோ பேரினவாத சக்திகளுக்கோ அற்ப சொந்த சுகங்களுக்காக சமூகத்தை ஏலம் கூறும் அரசியல்வாதிகளுக்கோ இதுவொரு பொருட்டல்ல. மனிதநேயம், சமாதானம், நேசம் இவற்றினடிப்படையில் மனிதவாழ்வு கட்டியெழுப்பப்பட வேண்டும்.

# பயனடைந்தது மக்களா? புலிகளா?

யாழ் மாவட்டத்தில் பட்டினியால் வாடும் உடன்பிறப்புக்களின் துயர்துடைக்க ஒரு கோடி ரூபா பெறுமதியான உணவு மற்றும் மருந்துப் பொருள்களை படகு மூலம் எடுத்துவந்து துன்பப்படும் மக்களின் துயர்துடைக்கப் போவதாக தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ நெடுமாறன் அறிவித்தார். கடந்த 12.09.2007 அன்று தமிழ்நாட்டின் நாகபட்டினம் கடற்கரையிலிருந்து அடையாளமாக யாழ்ப்பாணத்துக்கு பொருட்களை எடுத்துவரச் சென்ற அவருக்கு படகோட்டிகளான மீனவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. பொலிஸாரின் அச்சுறுத்தல் காரணமாகத்தான் மீனவர்கள் படகுகளை வழங்க முன்வரவில்லை என்று அவர் குற்றஞ்சாட்டிய போதும் பிபிசி தமிழோசைக்கு கருத்து தெரிவித்த மீனவர்கள் அதனை மறுத்தனர். இலங்கை தமிழர்களுக்கு உதவ விரும்புகின்றோம் ஆனால், பாதுகாப்பு உத்தரவாதமில்லாத இந்தப் பயணத்தை மேற்கொள்ள 'நாங்கள் தயாரில்லை, இது போன்ற நடவடிக்கைகள் அரசின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தெரிவித்தனர்.



இதேவேளை நெடுமாறனும் அவரது அமைப்பை சேர்ந்த சிலரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். யாழ்ப்பாணத்திற்கு பொருட்களை எடுத்துச்செல்ல அனுமதிக்காவிடின் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொள்ளப் போவதாக அறிவித்து உண்ணாவிரதத்தில் ஈடுபட்டார். மூன்று நாட்களில் உடல்நிலை மோசமடையவே அவரது அரசியல் சகபாடிகள் பழரசம் வழங்கி அவரது உண்ணா நோன்பை முடித்து வைத்தனர்.

ஊள்ளூரிலும், உலக நாடுகளிலும் நெருக்கடிகளை சந்தித்து, அரசியல் ரீதியான எந்த ஒரு போராட்டத்தையும் நடத்த முடியாத நிலையில் இருந்த புலிகளினதும், தமது இருப்புக்காக, புலிகளுக்கு துதிபாடுபவர்களதும் வானொலிகள், தொலைக்காட்சிகள் பத்திரிகைகளின் வாய்க்கு அவல் கிடைத்ததேயன்றி யாழ் மக்களுக்கு ஒரு பருக்கைதானும் கிடைக்காமலே நெடுமாறன் ஐயாவின் பயணம் முற்றுப் பெற்றது.

யாழ்ப்பாண குடாநாட்டில் கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் புலிகள் மேற்கொண்ட ஊடுருவும் தாக்குதலையடுத்து புலிகளுக்கும் படையினருக்கும் இடையே மோதல்கள் உக்கிரமடைந்தது. ஏ 9 தரைப்பாதை மூடப்பட்டது, குடாநாட்டில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஒரு மாதத்திற்கும் மேலாக குடாநாட்டு மக்கள் தமது தேவைகளுக்காக அல்லோலகல்லோலப்பட்டனர்.

அந்த மக்களின் துயரத்தை, பசியை போக்க ஆவன செய்திருக்க வேண்டிய தருணத்தில் புலிகள் தங்களது பொன் முட்டையிடும் வாத்தாக இருந்த ஏ 9 பாதையை திறப்பதற்கு அழுத்தத்தை ஏற்படுத்துவதற்காக, மக்களின் பட்டினியை பொருட்படுத்தவேயில்லை. மேலும் மேலும் அவர்களுக்கு நெருக்கடிகளை உருவாக்கி தமது நோக்கத்தை அடைவதிலேயே குறியாயிருந்தார்கள்.

*"யாழ்ப்பாண மக்களுக்கு கொடுக்க வேண்டியதை கொடுத்தால் நாங்கள் பொருட்களை படகுகளில் ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் செல்லவேண்டிய அவசியம் இருக்காது"* என்று நெடுமாறன் கூறியிருந்தார். யாழ்ப்பாண மக்களுக்கு அரசாங்கம் கொடுக்க முன்வந்ததை கூட கொண்டுவர முடியாமல் தடுத்தவர்கள் புலிகள் என்பது அவருக்குத் தெரியாது.

வர்த்தகர்கள் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் பொருட்களை எடுத்துவருவதை தடுத்தார்கள், சர்வதேச செஞ்சிலுவை சங்கம் மனிதாபிமான அடிப்படையில் உணவு மற்றும் மருந்துப் பொருட்களை கப்பலில் எடுத்துவருவதற்கும், மருத்துவ சிகிச்சைக்காகவும் மற்றும் அத்தியாவசிய தேவைகளின் நிமித்தமும் வெளியிடங்களுக்கு செல்ல வேண்டிய மக்களை கடல்வழியாக அழைத்துச் செல்வதற்கும் முன்வந்த போதும் அவர்களையும் அச்சுறுத்தல் விடுத்து தடுத்தவர்கள் புலிகள். விமானப்படையின் விமானங்களும், கடற்படையின் கப்பல்களும் புலிகளின் தாக்குதல்களை எதிர்கொண்டவாறே எமது குழந்தைகளுக்கு பால்மாவையும், பட்டினியை எதிர்நோக்கியிருந்த மக்களுக்கு அரிசி. சீனி, கோதுமை, பருப்பு என அத்தியாவசிய பொருட்களையும் எடுத்துவந்தன. குடாநாட்டு மக்கள் வெளியிடங்களுக்கு செல்லவும், உள்ளே வரவும் வழிவகை செய்தவர்கள் படையினரே. அந்த சமயத்தில் யாழ் குடாநாட்டில் சிக்கித் தவித்த மனச்சாட்சியுள்ள எந்த ஒரு குடிமகனும் இதனை மறுக்கவோ, மறக்கவோ மாட்டான்.

இராணுவத்தினர் கப்பலில் கொண்டு வந்த பொருட்களை பெற்று மக்களுக்கு விநியோகிக்க வர்த்தகர்கள் முன்வந்த போது அவ்வாறு விற்பனை செய்யக்கூடாது என வர்த்தகர்களை தடுத்தவர்கள் புலிகள். இதனால் கூட்டுறவு கடைகளிலும், இராணுவ முகாம்களிலும் மக்களுக்கு பொருட்கள் விநியோகிக்கப்பட்டது. உணவுப் பொருட்கள் உட்பட அத்தியாவசிய பொருட்களை கூட்டுறவு சங்கங்கள் ஊடாக விநியோகிக்க நடவடிக்கைகளை மேற்கொண்ட அரசாங்க அதிபரும், அதிகாரிகளும் தமது போராட்டத்திற்கு துரோகம் இழைப்பதாவும், மன்னிக்கப்பட மாட்டீர்கள் என்றும் புலிகளால் எச்சரிக்கப்பட்டனர். ஐயா நெடுமாறன் அவர்களே இவ்வாறான இக்கட்டான ஒரு நிலையில் நாங்கள் இருந்த போது எங்களுக்கு உணவு எடுத்துவருவதற்கு நீங்களும் இத்தனை தீவிரம் காட்டவில்லையே? ஏன்? மக்களுக்கு பெரிய அளவில் கஸ்டங்களும் தேவைகளும் இருந்த போதும் புலிகளின் நோக்கங்களுக்கு அது சாதகமானதாய் இருக்கவில்லை. ஏ9 பாதையை திறக்கவேண்டும் என்ற புலிகளின் கோரிக்கையை அது பலவீனப்படுத்திவிடும் என்று ஏனைய புலிகளின் ஆதரவாளர்கள் கருதியது போலவே நீங்களும் கருதினீகளோ தெரியாது. ஆனால், அன்றைக்கு நீங்கள் யாழ்ப்பாண மக்களுக்கு உணவு கொண்டு வரமுயன்றிருந்தால் இப்போது உங்கள் செயலுக்கு முக்கியத்துவமளித்து அமர்க்களப்படுத்திய புலிகளின் பிரச்சார சாதனங்கள் எதுவும் உங்களை திரும்பிக் கூடப் பார்த்திருக்காது.

திலீபன் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளராக இருந்த காலத்தில் மக்களின் உணவு விநியோகம், சுகாதார சேவைகள், உள்ளூராட்சி சபைகளால் மேற்கொள்ளப்பட்ட மக்கள் நலன்பேணும் நடவடிக்கைகள், கல்வி போன்ற அத்தியாவசிய சேவைகள் சீருலைக்கப்படக் கூடாது என்பதை தமது இயக்கத்தின் கொள்கையெனக் கூறிவந்தார். மக்களுக்கு நியாய விலையில் பொருட்களை வழங்க புலிகள் யாழ் மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் மக்கள் கடைகளை நிறுவியிருந்தார்கள் இன்று நிலமை தலைகீழாகிவிட்டது. திலீபனுக்கு விழா எடுக்கும் புலிகள் அவரது சிந்தனைகளுக்கு எதிராகவே செயற்பட்டு வருகின்றார்கள்.

யாழ்ப்பாணத்தில் உணவுப்பொருட்களின் விலைகள் அதிகரித்துக்காணப்படுவது உண்மை, ஒரு சில பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதும் உண்மை. ஆனால், அன்றிருந்த பாரிய நெருக்கடி இன்றில்லை. இன்று யாழ் மாவட்ட மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை படுகொலைகளாகும். கடந்த ஒரு மாதத்தில் (ஆகஸ்ட்) மாத்திரம் 30 பேர் கொல்லப்பட்டுள்ளார்கள். இதற்கு மூலகாரணமானவர்கள் யார்?

யாழ்ப்பாண மக்கள் எதிர்நோக்கும் விலை அதிகரிப்பு, பொருள் தட்டுப்பாடு என்பவற்றுக்கு மறைமுகமாக காரணமானவர்கள் புலிகளே! புலிகள் வரி என்ற பேரில் வர்த்தகர்களிடம் பணம் பறிக்கிறார்கள் "செட்டி நட்டம் ஊர் மேல்" என்பதற்கிணங்க வர்த்தகர்கள் இதனை மக்களின் தலையில் கட்டிவிடுகின்றார்கள். புலிகளுக்கு வரியாக வாரி இறைப்பதால் எந்த அரச அதிகாரியும் தலையிடமாட்டார்கள் என்ற தைரியத்தோடு ஒவ்வொரு வர்த்தகரும் பொருட்களின் விலைகளை தாங்களே தீமானித்துக்கொள்கின்றனர். பொதுவான, நிர்ணயிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலைகள் எதுவும் கிடையாது. கடைகளில் விலைகளை மக்களின் பார்வைக்கு வைப்பது வழக்கொழிந்து போய்விட்து.

கப்பலில் பொருட்களை எடுத்து வருவதுதான் விலை அதிகரிப்புக்கு காரணம் என்று கூறப்படுவது முழு உண்மையில்லை. 2002 இல் ஏ 9 பாதை திறக்கப்படுவதற்கு முன்னரும் கப்பல் மூலமாகத்தான் பொருட்கள் எடுத்து வரப்பட்டது.

கொழும்பில் 650 ரூபாவிற்கு கிடைக்கும் ஒரு மூடை சீமெந்து (50 கிலோ) யாழ்ப்பாணத்தில் 1715 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுகின்றது. இத்தனை மடங்கு விலை அதிகரி ப்பிற்கு காரணம் மூடை ஒன்றிற்கு 450 ரூபா புலிகளு க்கு செலுத்தப்படுவதாகும்.

கொழும்பிலிலுந்து சென்னைக்கு இருவழி விமானக் கட்டணம் 13,500 இலங்கை ரூபா, கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு இருவழி கட்டணம் 18,000 ரூபாவாகும். இரண்டுமே சுமார் ஒரு மணி நேர பறப்பு என்ற போதும் புலிகள் 4000 ரூபாவைப் பிடுங்கிக் கொள்வது தான் இந்தப் பாரிய வேறுபாட்டுக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வர்த்தகர்கள் வியாபார நடவடிக்கைகளை முழு அளவில் மேற்கொள்ள தயங்குகின்றார்கள். தங்களது வியாபாரம் புலிகளின் கண்ணை உறுத்துமாயின் அவர்களுக்கு பெருந்தொகையை கப்பமாக செலுத்த நேரும் என அஞ்சுகின்றார்கள். கப்பலில் பெருமளவில் பொருட்களை எடுத்து வரும்போது புலிகளின் தாக்குதலில் சிக்கிவிடுவோம் என்ற கவலையும் அவர்களை தடுக்கின்றது. தரைப்பாதை தடைப்பட்டு யாழ்ப்பாணத்தில் பொருட் களுக்கு பொரும் தட்டுப்பாடு நிலவிய சமயத்தில் வர்த்தகர் ஒருவர் பேசும் போது "புலிகளின் அச்சுறுத்தலும், ஆக்கினைகளும் இல்லாவிட்டால் ஒரு தொலைபேசி அழைப்போடு யாழ்ப்பாண மக்களுக்குத் தேவையான அளவு பொருட்களை கப்பல் மூலம் எடுத்துவர எங்களால் இயலும்" என்று கூறினார். உண்மையும் அதுதான்.

ஐயா, யாழ்ப்பாண மக்களுக்கு உதவப்போகின்றோம், நன்மை செய்கிறோம் என்ற எண்ணத்தோடு நீங்கள் எடுத்த முயற்சியும், போராட்டமும் புலிகள் அந்த மக்களுக்கு இழைத்துவரும் கொடுமைகளை மூடிமறைத்து விட்டது.

ஆகவே, யாழ்ப்பாண மக்களுக்கு உதவவேண்டும் என்று விரும்பும் தமிழக தலைவர்கள் யாராயினும் அங்கிருந்து எங்களுக்கு உணவு எடுத்து வருவதற்காக உண்ணா நோன்பிருந்து உடலை வருத்த வேண்டாம். சட்டவிரோத பயணங்களும் வேண்டாம். புலிகள், வரி என்ற பேரில் வர்த்தகர்களிடம் வரி என்றபேரில் கொள்ளையடிப்பதை புலிகளுடன் உங்களுக்குள்ள உறவை பயன்படுத்தி தடுங்கள். தலைநகர் கொழும்பிலிருந்து கடல்வழியாக கப்பலில் பொருட்களை எடுத்து வருவதற்கும், கடல்வழியாக மக்கள் பயணம் செய்வதற்கும் புலிகள் அச்சுறுத்தலாக இருக்கமாட்டார்கள் என்ற உத்தரவாதத்தை பெற்றுக்கொடுங்கள். யாழ்ப்பாணத்தில் விலை அதிகரிப்பும், தட்டுப்பாடும் மறையும். மக்களின் தேவைகளும் பூர்த்தியாகும. ●

தி. சிறிதரன் 29ஏ, வாவிக்கரை வீதி, மட்டக்களப்பு அவர்களால் இந்திரப்பிட்டிய C.R.C Press அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org